# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 14 சனிக்கிழமை(30-09-2000)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:239


## தென்மராட்சி கிழக்கில் கடும் சண்டை தொடர்கிறது

# பாதுகாப்புக் கருதி மக்கள் நேற்று ஆயிரக்கணக்கில் இடம்பெயர்வு!

### உயிரிழந்த ஐவர் குறித்து அறிவிப்பு

'ஓயாத அலைகள் - 4' நடவடிக்கையின் போது உயிரிழந்த மேலும் ஐவரின் விவரங்களை விடுதலைப் புலிகள் நேற்றிரவு அறிவித்தனர்.

★ குயிலிசை (மகேந்திரன் தயாளினி - வவுனியா)

★ நல்லறி (லட்சுமி பிரபா - விஸ்வமடு)

★ சிறப்பு எல்லைப்படை வீரர் கப்டன் உதயசங்கர் அல்லது ரகு (செல்லத்துரை மங்களேஸ்வரன் - யாழ்ப்பாணம்)

★ சிறப்பு எல்லைப் படை வீரர் தீபன் (பாலசுப்பிரமணியம் பிரதீபன்-யாழ்ப்பாணம்)

★ சிறப்பு எல்லைப்படை வீரர் திலீபன் (திலகரன் திலீபன் - பூநகரி)

## வரணியில் திரண்டிருப்பவர்கள் வடமராட்சி செல்ல இன்று அனுமதி

யாழ்ப்பாணம்,செப்ரெம்பர்30

**தென்மராட்சி கிழக்கில் நேற்று நாலாவது நாளாக விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடும் சண்டை தொடர்ந்து நடைபெற்றது.**

**இரு தரப்பினரும் நடத்தும் ஷெல் வீச்சுக்களுக்கும் விமானப்படையினரின் குண்டு வீச்சுக்கும் அஞ்சி - பாதுகாப்புக் கருதி - மக்கள் ஆயிரக்கணக்கில் தமது வதிவிடங்களை விட்டு அவசர அவசரமாக இடம்பெயர்ந்து வருகின்றனர்.**

மிருசுவில், கொடிகாமம், கச்சாய், மந்துவில், வரணி ஆகிய இடங்களைச் சேர்ந்த சுமார் ஆறாயிரம் மக்கள் நேற்று வரணிச் சந்தியடி, சுட்டிபுரம் அம்மன் கோபிலடிப் பகுதிகளில் திரண்டிருந்தனர்.

இவர்கள் அங்கிருந்து வடமராட்சி செல்வதற்கு இன்று அனுமதிக்கப்படுவர் என்று யாழ். மாவட்ட படைத்தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா உறுதியளித்ததாக அறியவந்தது.

கொடிகாமம் - வரணி வீதியை அண்டிய பிரதேசங்களில் ஷெல்கள் நேற்று இடைவெளியின்றித் தொடர்ந்து வீழ்ந்ததால் மக்கள் மத்தியில் பெரும் பதற்ற நிலை தோன்றியது.

இதற்கு முன்னர் நேற்றுக்காலை விடுதலைப்புலிகள் தமது வானொலி மூலம் விடுத்த அறிவிப்பைக் கேட்டதனாலும் மக்கள் அவசர அவசரமாக தமது வீடுகளை விட்டு இடம்பெயர்ந்தனர்.

முள்ளிச் சந்திக்கு அப்பால் வடமராட்சி நோக்கிச் செல்ல முயன்ற மக்கள் அதற்கு அனுமதி இல்லாததால் வரணிப் பகுதியில் தங்கினர். உடைமைகள் எதுவுமின்றி வந்த சிலர் மட்டும் அப்பால் செல்ல அனுமதிக்கப்பட்டதாகத் தெரியவந்தது.

நேற்று மாலை வரையில் சுமார் ஆறாயிரம் பேர் வரணிக்கு வந்திருந்தனர் என்று அங்கு சென்று திரும்பிய ஐ.தே. கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் எஸ். மகேஸ்வரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

கொடிகாமத்தில் உள்ள படை அதிகாரியிடம் மக்களின் திக்கற்ற நிலையை எடுத்துக் கூறி அவர்கள் விரும்பிய இடத்துக்குச் செல்வதற்கு அனுமதிக்குமாறு தாம் கோரியதாகவும் -

இன்று காலையில் அதற்கு அனுமதி அளிக்கப்படும் என்று அவர்கள் உறுதியளித்ததாகவும் -

யாழ். மாவட்டப் படைத்தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திராவுடன் உடன் தொடர்பு கொண்ட போதும், மக்களை அவர்கள் விரும்பிய இடங்களுக்குச் செல்ல அனுமதிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தர விடுவதாக அவரும் உறுதியளித்ததாகவும் - வேட்பாளர் மகேஸ்வரன் மேலும் சொன்னார்.

## புலிகளின் ஊடுருவல் முயற்சியை முறியடித்ததாக அரசு அறிவிப்பு

கொழும்பு,செப்.30

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் நடைபெறும் சண்டையில் எழுதுமட்டுவாழ், நாகர்கோயில் பகுதிகளில் ராணுவப் பாதுகாப்பு நிலைகளுக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவ முயன்ற போதிலும் படையினர் அதனை முறியடித்ததாக அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இந்த முயற்சியைப் படையினர் முறியடித்து மேற்கொண்ட தாக்குதலில் புலிகளுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் வியாழக்கிழமை வரை இடம்பெற்ற சண்டையில் ஆகக் குறைந்தது 120 விடுதலைப் புலிகள் உயிரிழந்திருக்கலாம் என்றும் - ஊடகத் தகவல் நிலையம் நேற்று பிற்பகல் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் இடம்பெற்ற சண்டைகளில் மொத்தம் 31 படையினர் உயிரிழந்ததாகவும், 164 படையினர் காயமடைந்ததாகவும் அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை -

தாம் மீட்ட பகுதிகளைப் பலப்படுத்தி வருவதாகவும் -

அங்கு இடம்பெற்ற சண்டைகளில் படைத்தரப்புக்கு பலத்த இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் விடுதலைப் புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## லஞ்ச ஊழல் வழக்கில் நரசிம்மராவ் குற்றவாளி!


புதுடில்லி,செப்.30

இந்தியாவின் முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் (காங்கிரஸ்) லஞ்ச ஊழல் வழக்கில் புதுடில்லி நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டுள்ளார்.

ஒக்ரோபர் 13 ஆம் திகதி இவர் மீதான தண்டனை அறிவிக்கப்படும்.

ராஜீவ் காந்தியின் படுகொலைக்குப் பின்னர் பிரதமராகப் பதவியேற்ற நரசிம்மராவின் அரசாங்கம் 1993இல் நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை எதிர்நோக்கியது.

அரசாங்கம் தோல்வியிலிருந்து தப்புவதற்காக ஜார்கண்ட் முக்தி மோட்சா கட்சியைச் சேர்ந்த நான்கு எம்.பிக்களுக்கு சுமார் எட்டு லட்சம் அமெரிக்க டொலர்களை நரசிம்மராவ் லஞ்சமாக வழங்கினார் என்று இந்த வழக்கில் சி.பி.ஐ குற்றஞ்



சாட்டியிருந்தது.

சுமார் ஐந்து வருட காலம் இந்த வழக்கு நடைபெற்றுத் தற்பொழுது தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் ஒருவர் தாம் பதவியில் இருந்த காலத்தில் மேற்கொண்ட லஞ்ச ஊழலுக்காக குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டது இதுவே முதல் தடவை ஆகும்.

(இ-8)

# 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் வெளியாகின!

## குடாநாட்டில் வல்வை சிவகுரு வித்தியாலய மாணவனுக்கு கூடுதல் புள்ளிகள்

கொழும்பு,செப்.30

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் நேற்று கொழும்பில் வெளியாகின.

இந்த முடிவுகளின்படி பரீட்சைக்குத் தமிழ் மொழி மூலம் தோற்றிய 47 ஆயிரத்து 510 பேரில் 4 ஆயிரத்து 308 பேர் சித்தியடைந்துள்ளனர்.

இந்தப் பரீட்சை முடிவுகளின்படி அகில இலங்கை ரீதியாக தமிழ் மொழி மூலம் தோற்றியவர்களில் 52 மாணவர்கள் முதன் நிலையில் சித்தி பெற்றனர். இவர்களில் 13 மாணவர்கள் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

முதன்நிலை மாணவர் வெட்டுப் புள்ளி 176 எனவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் அதிகூடிய புள்ளி பெற்று முதன்நிலை பெற்ற

(15ஆம் பக்கம் பார்க்க)

## சுவரொட்டி ஒட்டியவர்கள் மீது கல்வியங்காட்டிலும் தாக்குதல்!

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பிலான சுயேச்சைக் குழுவின் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்தவர்கள் இனந்தெரியாதவர்களின் தாக்குதலுக்கு உள்ளாகினர்.

இந்தச் சுயேச்சைக் குழுவில் போட்டியிடும் கிருஷ்ணசாமி முத்துக்குமாரு என்பவரின் ஆதரவாளர்கள் நேற்றுக்காலை 11.30 மணியளவில் கல்வியங்காடு டச்சு வீதிப் பகுதியில் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்தனர் என்றும் -

அச்சமயம் அங்கு வந்த இனந்தெரியாத மூவர் இவர்களைத் தாக்கியதாகவும் - இந்தச் சுயேச்சைக் குழுவில் போட்டியிடும் மற்றொரு வேட்பாளரான எஸ்.சிவஞானம் தெரிவித்தார்.

இதற்கு முன்னரும் இரு தடவைகள் அந்தப் பகுதியில் தமது ஆதரவாளர்கள் தாக்குதலுக்கு உள்ளாகினர் என்று அவர் மேலும் சொன்னார்.

சுவரொட்டிகளை ஒட்டியவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் நேற்றுமுன்தினம் யாழ்.இந்துக் கல்லூரிக்குச் சமீபமாகவும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

(இ-3)

## ஜே.வி.பி. இன்று ஆர்ப்பாட்டம்

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் தமது வேட்பாளர்களுக்கு எதிராக அரசு கட்டவிழ்த்து விட்டுள்ள வன்முறைகளைக் கண்டித்து ஜே.வி.பி. அமைப்பினர் ஆர்ப்பாட்டம் ஒன்றைக் கொழும்பு ரயில் நிலையத்துக்கு முன்பாக இன்று நடத்தவுள்ளனர். (16ஆம் பக்கம் பார்க்க)

## பாண் விலை நாளை முதல் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ்.மாவட்டத்தில் நாளை முதலாம் திகதி தொடக்கம் பாணின் நிறை 450 கிராமாக அதிகரிக்கப்பட்டு பாண் பத்து ரூபாவுக்கு விற்கப்படும்.

யாழ்.செயலகத்தில் கடந்த மாதம் 25 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் பாணின் புதிய நிறையும், புதிய விலையும் நாளை முதல் நடைமுறைக்கு வரவுள்ளன.

நிர்ணயிக்கப்பட்ட நிறைக்குக் குறைவாகப் பாண் உற்பத்தி செய்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

தற்பொழுது 350கிராம் பாண் 7 ரூபா 50 சதத்துக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. நாளை முதல் இந்த அளவிலும் விலையிலும் மாற்றம் செய்யப்படவுள்ளன. (இ-5)

## பெருமாளைக் கொல்லவே கொழும்பு வந்தாராம்!

### கைதானவர் குறித்துத் தகவல்

கொழும்பு,செப்.30

கொழும்பு செட்டித்தெருவில் தற்கொலைக் குண்டுதாரிகள் அணியும் அங்கியுடன் கைதானவர், வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் முதல்வரும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தேசியப் பட்டியலில் இடம்பெற்றுள்ளவருமான அ.வரதராஜப்பெருமாளை இலக்குவைத்தே கொழும்பு வந்துள்ளார் என்று பொலீஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் புறக்கோட்டை செட்டித்தெருவில் ஓட்டோ ஒன்றில் சென்ற இந்த இளைஞனை வழிமறித்த பொலீஸார் அவரை விசாரணை செய்து அவர் கொண்டு சென்ற தொலைக்காட்சிப்பெட்டிக்குள் இருந்து தற்கொலைக் குண்டுதாரி அணியும் அங்கி ஒன்றை மீட்டனர் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த இளைஞனை விசாரணை செய்ததில் அவர், வரதராஜப்பெருமாளைக் கொலை செய்யும் நோக்கத்துடன் மட்டக்களப்பில் இருந்து வந்துள்ளார் என்றும் -

அவரிடம் இருந்து 20கிலோ வெடிமருந்தும் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் - பொலீஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

(இ-3-186)

## சாரணர் கூட்டம்

தென்மராட்சி - பளை சாரணர் கிளைச்சங்க விசேடகூட்டம் எதிர்வரும 14ஆம் திகதி காலை 9.30மணிக்கு நெல்லியடி ம.மா. வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இந்தககூட்டத்தில் முக்கிய விடயங்கள் சம்பந்தமாக இறுதிமுடிவுகள் எடுக் கப்படவுள்ளதால் அதிபர், ஆசிரியர், சாரணத்தலைவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மாவட்ட ஆணையாளர் கேட்டுள்ளார்.

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
கார்த்திக், ரோஜா, அஜித்
மற்றும் பலரின் நடிப்பில்
**உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்**
காட்சிகள்: 10.30, 2.00 (பு.நே)
(C/12920)

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
விஜய், சிம்ரன், மணிவண்ணன்
நடிப்பில்
**துள்ளாத மனமும் துள்ளும்**
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)
(78844)

**ஸ்ரீ செல்வா சினிமா**
ஸ்ரான்லி வீதி
10.30
பிரபு, ரம்யாகிருஷ்ணன்
நடித்த
**பட்ஜட் பத்மநாபன்**
2.30
அர்ஜுன், மீனா
நடித்த
**ரிதம்**
(C.D. பிரதி
புதிய வெளியீடு)
(C/13142)



அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியை
ஆதரித்து வாக்களிக்குமாறு வேண்டுகிறேன்.
வேட்பாளர் பன்னிருவரில் ஒருவனாகிய
**இராமசாமி உருத்திரா** ADVOCATE B.Sc. (London)
புத்தூர் சோமாஸ் கந்தக் கல்லூரி,
கரவெட்டி புனித இருதயக்கல்லூரி,
அநுராதபுரம் புனித ஜோசேப்பர் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் ஆசிரியர்,
யாழ்.பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்.





X

இராமசாமி உருத்திரா 10

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | | | | | | | | |

**அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்**
(78250)

## லாலா சோப் ஸ்தாபனத்தாரின் பாராட்டுக்களைப் பெறுபவர்கள்

எமது லாலா சோப் சிறுகைத்தொழிலுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்த எமது வாடிக்கையாளர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது!

- ★ அச்சுவேலி ப.நோ.கூ. சங்கம்
- ★ நீர்வேலி ப.நோ.கூ. சங்கம்
- ★ கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கம
- ★ உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்
- ★ பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கம்
- ★ அளவெட்டி ப.நோ.கூ. சங்கம்
- ★ தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம்
- ★ நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கம்

ஆகிய ப.நோ.கூ.சங்கத் தலைவர்கள், முகாமையாளர்கள், கொள்வனவு உத்தியோகத்தர்கள், களஞ்சியப் பொறுப்பாளர்கள், கிளை முகாமையாளர்கள், உதவியாளர்கள் அனைவருக்கும் எமது மறக்க முடியாத பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

லாலா சோப் உரிமையாளர்கள் ப.நோ.கூ.சங்கங்கள், விற்பனை முகவர்கள், கடை முதலாளிகள் மேன்மேலும் எமது உற்பத்தி வளர தங்கள் உதவிகளை எதிர்பார்க்கின்றோம்.

**லாலா சோப் தொழிற்சாலை,**
**அச்சுவேலி.**
(C/13096)

**உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பவர்களே எமது பொருளாதாரத்தை வளர்ப்பவர்கள்!**

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் 10.10.2000

☆ தமிழர்களுக்கு தாய் மொழி தமிழ் - தமிழ்மொழியே தமிழர்களின் பொது மொழி -

☆ தமிழர்களுக்கு இலங்கையின் வடக்குக் கிழக்கு மாநிலம் பாரம்பரியத் தாயகம் -

☆ தமிழர்களுக்கென்று பொதுவான தனித்துவமான பண்பாடு உண்டு -

☆ தமிழர்களுக்கென தமிழர் தாயகத்தில் பொருளாதார மூலத் தளங்களுண்டு என்பதால்,

**தமிழ் மக்கள் ஒரு தனியான தேசிய இனம் - அத் தமிழ்த் தேசிய இனத்திற்கு உரித்தான சுயநிர்ணய உரிமை (Right of Self - Determination) உண்டு.**

☆ மக்களிடமே எப்பொழுதும் இறைமை (Sovereignty) இருப்பதாலும்,
தமிழ்த் தேசிய இனத்திற்கு உரித்தான சுய நிர்ணய உரிமை அடிப்படையிலும் -
தமிழ்த் தேசிய இனம், 'தனியான சுதந்திர நாட்டில்' வாழ்வதா அல்லது இலங்கைக் கூட்டாட்சி அரசின் அங்கமான 'ஒரு தன்னாட்சித் தமிழ் மாநில அரசில்' வாழ்வதா எனும் தம் எதிர்கால அரசியல் ஆட்சிக் கோட்பாட்டைத் தீர்மானிக்கும் உரிமை தமிழ் மக்களுக்கு உண்டு என்பதே தந்தை செல்வநாயகம் தமிழ்ச் சமுதாயத்திற்கு விட்டுச்சென்ற தத்துவமாகும் - சொத்தாகும்.

❄ அத்துடன் வடக்குக் கிழக்கு மாநிலத்தைத் தங்கள் வாழ்விடமாகக் கொண்ட முஸ்லீம் மக்களின் தனித்துவத்தையும், அரசியல் உரிமைகளையும் அங்கீகரித்தவர் தந்தை செல்வா.

☆ இந்த அடிப்படைகளில் நின்று தமிழீழத் தாயக மக்களின் விடுதலை இலட்சியத்தை அடைவதற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி தன்னை மீண்டும் அர்ப்பணித்து ஜனநாயக வழியில் உழைப்பதென்று திடசங்கற்பம் பூண்டுள்ளது.

தமிழ்மொழியால் ஒன்றுபட்ட மக்கள் அங்கீகாரத்தை இத்தேர்தலிலும் த.வி.கூட்டணி கோரிநிற்கின்றது.

☆ உதய சூரியன் சின்னத்திற்கே வாக்களியுங்கள் -
☆ தமிழர் விடுதலைக் கூட்டணியை வெற்றிபெறச் செய்யுங்கள்.

**தமிழர் விடுதலைக் கூட்டணி**



X

(C/13141)

# உதயன்

## தூரப்போகும் அதிர்ஷ்டம்

புற்றுநோய் உலக மக்களின் உயிர்க்கொல்லி நோய்களில் இரண்டாவது இடத்தைத் தொடர்ந்து பிடித்து வருகிறது. முதலாவது இடத்தை வகிக்கும் "எய்ட்ஸ்" நோயைப் போலன்றி, புற்றுநோய்க்குச் சிகிச்சைகள் உண்டு. ஆரம்பகாலத்தில் இதனைக் கண்டுபிடித்தால், நோயாளியை கணிசமான வருடங்களுக்கேனும் உயிருடன் வாழ வைக்கலாம். வெளிநாடுகளில் மட்டுமன்றி இலங்கையின் பல மாவட்டங்களைச் சேர்ந்த நோயாளர்களுக்கு இந்த வாழ்நாள் அதிர்ஷ்டம் உண்டு!

ஆனால் யாழ்ப்பாணத்து மக்களைப் பொறுத்தவரையிலோ நீண்ட காலமாகவே அந்த அதிர்ஷ்டம் எட்டிப்பார்க்க மறுக்கிறது!

குடாநாட்டு மக்களும் இந்த நாட்டுப் பிரஜைகளே. ஜனநாயக உரிமைகளை அனுபவிக்கும் அவர்களும் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்துக்கான தமது பிரதிநிதிகளை தெரிவு செய்ய வசதி செய்தாக வேண்டும் என்பதற்காக இங்கும் தேர்தலை நடத்துகிறது அரசாங்கம். ஆயின் குடாநாட்டுப் புற்றுநோயாளிக்கு மேற்சொன்ன அதிர்ஷ்டம் கிடைக்கவிடாமல் அதே அரசாங்கம் தடுக்கிறது. வாக்குரிமை பழுதுபடக்கூடாது என்று கரிசனை கொண்டுள்ள அரசு, நோய்க்கு சிகிச்சை பெறும் மக்களின் உரிமையை மறுக்கிறது!

யாழ்ப்பாண மக்கள் புற்றுநோயால் பாதிக்கப்படுவது அதிகம் என்ற காரணத்தினால் அறுபதுகளிலேயே தெல்லிப்பழையில் புற்றுநோய்சிகிச்சை நிலையம் தனியாக அமைக்கப்பட்டது. "கோபால்ற்" சிகிச்சை இயந்திரப் பிரிவும் விசேடமாக ஸ்தாபிக்கப்பட்டது.

போர் பெருவடிவம் எடுத்ததால், தெல்லிப்பழைப் பகுதியில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்த காலத்துடன் மேற்படி சிகிச்சை நிலையம் இயங்க முடியாது போயிற்று. பலவருடங்கள், பல தரப்புகளும் இடித்துரைத்ததன் பேரில், அடிமேல் அடி விழுந்த அம்மி நகர்ந்தது போல, புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவை மீண்டும் இயங்கச் செய்வதற்கு ஏற்பாடாகியது.

புனர்நிர்மாண வேலைகளில் மிகப் பெரும்பகுதி ஒப்பேறி நிலையம் பூர்த்தியாகும் வேளையில், மீண்டும் அதனை இயக்க முடியாத நிலை உருவாகியுள்ளது; தடங்கல் நிலை ஏற்பட்டுள்ளது. புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்துக்குச் சமீபமாக இராணுவ நிலையம் ஒன்று அமைக்கப்பட்டதால் புனர்நிர்மாண வேலைகளை பூர்த்திசெய்ய இயலவில்லை.

அதன் விளைவு -

"கோபால்ற்" இயந்திரத்தைக் கொண்டு வந்து பொருத்துவது எவ்வாறு? அதன் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லாத வேளை எவ்வாறு சிகிச்சை நிலையத்தை இயக்க முடியும்? நோயாளர்களை அங்கு தங்க வைப்பதும், பணியாளர்களை கடமைக்கு அமர்த்துவதும் உயிராபத்து நிறைந்ததாக மாறும் வேளை புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்தை தொடங்குவது எவ்வாறு?

புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை மீள ஆரம்பித்து விடவேண்டும் என்ற அக்கறையில் அதனை நாடிச் செயற்பட்ட மருத்துவர்களும், அதிகாரிகளும் மேற்கண்ட பலகேள்விகளுக்கு விடை காண முடியாமல் தத்தமது தலைமயிர்களைப் பிய்த்துக் கொண்டிருக்கிறார்கள்!

குடாநாட்டு நோயாளருக்கோ ஆரம்பத்திலேயே சிகிச்சை பெற்று அதிக காலம் வாழக்கூடிய அதிர்ஷ்டமும் மேலும் தூர விலகிப்போகிறது!

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், தமிழ் மக்கள் பால் அது கொண்டுள்ள 'கரிசனை'யின் பொருட்டும் அவர்களுக்கு உள்ள உரிமைகளைப் பாதுகாக்கும் 'அதீத அக்கறையின்' பாற்பட்டும் பாதுகாப்புக் காரணம் என்று வந்துவிட்டால், ஏனையவை எல்லாம் பின்தள்ளப்பட்டுவிடும்; மறந்து போய்விடும். எங்கும், எதிலும், எப்போதும், எல்லாவற்றிலும் பாதுகாப்புக் காரணத்துக்கே முதலிடம், முன்னுரிமை, முக்கிய கவனிப்பு என்ற 'கொள்கை'யை அரசு ஒரு போதும் மாற்றமாட்டாது!

ஆகையால் புற்றுநோயால் பீடிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணத்து மக்கள் நோயின் பாதிப்பால் அனுபவிக்கும் உபாதைகளையும் வேதனைகளையும் விட, அதற்குச் சிகிச்சை பெறுவதற்காகப் படும் கஷ்டங்களையும் - போக்குவரத்து, தங்குமிட வசதிகளைப் பெறுவதில் படும் சிரமங்களையும் - தொடர்ந்து தாங்க வேண்டிய நிர்ப்பந்தம் நீடிக்கப் போகிறது.



நெடுந்தீவு பிரதேச சபைக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

விழாவில் நெடுந்தீவு பிரதேச செயலர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம், பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட நல்லூர் பிரதேச சபைத் தலைவர் கே.மணிபல்லவராஜன் ஆகியோர் உரையாற்றுவதை, முதல் இருபடங்களில் காணலாம். பிரேதச செயலர் மங்களவிளக்கு ஏற்றுவதை மூன்றாவது படத்தில் காணலாம். அருகில் நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் ஏ.டபிள்யூ அரியநாயகம், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி.கே.குகேந்திரன் ஆகியோரும் காணப்படுகின்றனர். (ஐ)

# தேர்தலுக்கு முன் ஆனையிறவை கைப்பற்றுவது சாத்தியப்படாது!

## இந்திய அமைதிப்படை தளபதி கருத்து

கொழும்பு,செப்.30

பொதுத்தேர்தலுக்கு முன்பு ஆனையிறவைக் கைப்பற்றுவது முற்றிலும் சாத்தியப்படாத ஒன்று என இலங்கையில் கடமையாற்றிய இந்திய அமைதிப் படையின் பிராந்தியத் தளபதி ஜெனரல் அஷோக் மேத்தா தெரிவித்துள்ளார்.

ஒக்ரோபர் 10ஆம் திகதிக்குள் இழந்த ஆனையிறவுப் படைத்தளத்தை மீண்டும் கைப்பற்ற முடியும் என்று பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் தெரிவித்துள்ளார். ஆனால் இந்தக் கால இடைவெளிக்குள் அது முற்றிலும் சாத்தியப்படாத ஒன்று என்றும் -

தற்போதைய இராணுவ நடவடிக்கைகள் தேர்தலை மையமாகக் கொண்டே மேற்கொள்ளப்படுவதாகவும் சிறியதொரு வெற்றியையும் பெரிதுபடுத்தி காண்பிக்க அரசாங்கம் முயற்சி செய்வதாகவும் மேத்தா குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை -

தேர்தலின் பின்னர் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதானால் தனது கை மேலோங்கி இருக்க வேண்டும் என்ற அரசின் நோக்கமும் இந்த இராணுவ நகர்வில் இருப்பதாக இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவர் என்.என்.ஜா தெரிவித்துள்ளார். (ஐ)

# ஆலய நீரிறைக்கும் இயந்திரம் இரவுவேளையில் திருடப்பட்டது

வலி.கிழக்கு,செப்.30

ஆலயத்தில் பொருத்தப்பட்டிருந்த தண்ணீர் இறைக்கும் இயந்திரம் இரவுவேளை இனந்தெரியாதவர்களால் களவாடப்பட்டுள்ளது.

கல்வியங்காடு அருள்மிகு மனோன்மணி அம்பாள் ஆலயத்தினுள் கடந்த புதன்கிழமை இரவு புகுந்த திருடர்கள் 6 ஆயிரம் ரூபா பெறுமதியான நீரிறைக்கும் இயந்திரத்தையும் கோயில் பாவனைப் பொருள்கள் சிலவற்றினையும் களவாடிச் சென்றுள்ளனர்.

இந்த ஆலயச் சுற்றாடல் பகுதியைச் சேர்ந்த சுமார் 100 குடும்பங்கள் இந்த ஆலயக் கிணற்றிலேயே குடிதண்ணீர் பெற்றுவந்தனர். (ஐ-180)

# தேர்தல் பிரசாரத்தின்போது மோதல்; மூவர் நிர்வாணமாக ஓட்டம்!

மாவத்தகம கஹபத்வல என்ற இடத்தில் ஐ.தே.க. - பொ.ஐ.முன்னணி ஆதரவாளர்களுக்கிடையிலான மோதல் காரணமாக மூவர் நிர்வாணமாக ஓடித்தப்பிய சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இது பற்றித் தெரியவருவதாவது:-

புதன்கிழமை ஹகபத்வல என்ற இடத்தில் ஐ.தே.கட்சியின் பிரசாரக் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்பகுதி முழுவதும் பச்சை நிறக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

அவ்வேளையில் அங்கு வந்த பொ.ஐ.முன்னணி ஆதரவாளர்கள் கொடிகளை வெட்டி சேதப்படுத்தி அட்டகாசம் புரிந்துள்ளனர். அப்போது அங்கு வந்த ஐ.தே.க. ஆதரவாளர்கள் சேதம் விளைவித்தவர்களைத் தாக்கத் தொடங்கியுள்ளனர்.

இவ்வேளை மேலும் வாகனங்களில் வந்த ஐ.தே.க. ஆதரவாளர்கள் சேர்ந்து தாக்கத் தொடங்கவே பொ.ஐ.முன்னணி ஆதரவாளர்களின் உடைகளும் கிளிக்கப்பட்டு அவர்கள் நிர்வாணமாக அருகில் இருந்த வயலில் குதித்து ஓடித்தப்பியுள்ளனர். இதன் பின்னர் பொ.ஐ.முன்னணி வேட்பாளரின் பதாகைகளும் ஏனைய சுவரொட்டிகளும் சேதமாக்கப்பட்டுள்ளன. (ஐ-4)

## தாச்சி போட்டி

வலி.கிழக்கு,செப்.30

கோப்பாய் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 13 வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆண்கள், பெண்களுக்கான தாச்சிப் போட்டி எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த முதற்சுற்று விளையாட்டில் 20 பாடசாலைகள் பங்குபற்றவுள்ளன. (ஐ-180)

# மாகாணக் கல்விப் பணிமனைக்கு புதிய வாகனம் எடுத்துவரப்படும்

யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனைக்கான புதிய வாகனம் கப்பலில் எடுத்து வரப்படுதற்காக யாழ். அரச அதிபரின் கொழும்பு அலுவலகப் பிரதிநிதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வாகனத்தை எடுத்து வருவதற்குரிய பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்தவுடன் அது கப்பலில் எடுத்து வரப்படும் என்று மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் ச.நா.தணிகாசலம்பிள்ளை தெரிவித்தார்.

அத்துடன் அலுவலகத்துக்கென கணனி, 'போட்டோபிரதி இயந்திரம்' மற்றும் 'பக்ஸ்' என்பனவும் எடுத்து வரப்பட்டுள்ளன. இவற்றை எடுத்து வருவதற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்ததும் இவை திருகோணமலையில் இருந்து எடுத்து வரப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-10-ரி)

## மாகாண கல்விப் பணிமனை இடமாற்றம்

யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகம் யாழ்.கல்வி வலயத்தின் சுற்றுலா விடுதிக்கு உடனடியாக மாற்றப்படவுள்ளது.

இது தொடர்பான உத்தரவை வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் வழங்கியிருப்பதாக மாகாணக் கல்விப்பணிப்பாளர் அலுவலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்தார்.(ஐ-10-ரி)

## வீதி சேதம்

காரைநகர்,செப்.29

காரைநகர் சுந்தரமூர்த்தி திக்கரை வீதி, மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு மிக மோசமாகக் சேதமடைந்துள்ளது.

காரைநகர் விவசாயிகளின் பாவனையில் உள்ள இந்த வீதி கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாகத் திருத்தப்படாமல் உள்ளது. தற்போது பெய்து வரும் மழையினால் சேறும் சகதியுமாகக் காணப்படும் இந்த வீதியூடாக மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாமல் சிரமப்படுகின்றனர். (ஐ-73)

## பாதுகாப்பு நடவடிக்கை அதிகரிப்பு

யாழ்.செயலகப்பகுதி மற்றும் நகரப் பகுதிகளில் நேற்று படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டிருந்தன.

சோதனைச்சாவடிகள் மற்றும் பிரதான சந்திகள், ஒழுங்கைகளில் வைத்து படையினரால் பொதுமக்கள் சோதனை செய்யப்பட்டனர்.

## இரத்தம் வழங்க கோரிக்கை

நெல்லியடி,செப்.30

மந்திகை மருத்துவமனையில் உள்ள இரத்த வங்கியில் 'ஓ' குறூப் இரத்த வகைக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

தற்பொழுது தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்றுவரும் மோதல சம்பவங்களினால் ஷெல் வீச்சில் அகப்பட்டு காயமடைவோர் தினமும் மந்திகை மருத்துவமனைக்குச் சிகிச்சைக்கு வருகின்றனர்.

இரத்தம் அவசியம் தேவைப்படுவதாகவும், 'ஓ' குறூப இரத்தம் வழங்க விரும்புவோர் மந்திகை மருத்துவமனையில் இரத்த வங்கியுடன தொடர்பு கொள்ளுமாறும் பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.கதிரவேற்பிள்ளை அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஐ-109)



நல்லூர் லயன்ஸ் கழகத்தினரால் கடந்த 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியசாலை இடம்பெயர்ந்தோர் முகாமில் மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்பட்டது.

லயன் டாக்டர் பிரதீப்குமார் நோயாளி ஒருவரைப் பரிசோதிப்பதை படத்தில் காணலாம். அருகில் மருத்துவபீட மாணவர்களும் நல்லூர் லயன்ஸ் கழக உறுப்பினர்களும் உள்ளனர். (ஐ)

## சனசமூக நிலையங்களுக்கு உதவிப்பணம்

சண்டிலிப்பாய்,செப்.30

வலிகாமம் மேற்கு பிரதேச சபை பிரிவில் இயங்கி வரும் 62 பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கும் இவ்வருடத்திற்கான உதவி நன்கொடைப் பணக்கொடுப்பனவை விரைவில் வழங்குவதற்கு பிரதேச சபையின் சுழிபுரத்திலுள்ள தலைமை அலுவலகம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இங்குள்ள 62 பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களில் 45 சனசமூக நிலையங்கள் 'ஏ' தரத்தில் உள்ளவை. இவற்றுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் உதவி நன்கொடைப் பணம் வழங்கப்படும்.

ஏனைய 17 சனசமூக நிலையங்களும் 'பி' தரத்தில் உள்ளவை என்றும் -

இவற்றுக்கு தலா 600 ரூபா வீதம் உதவி நன்கொடைப் பணம் வழங்கப்படும் எனவும் -

தெரிவிக்கப்பட்டது.

சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் இக் கொடுப்பனவைப் பெறுவதற்கு தங்கள் நிலையத்தின் பொதுக் கூட்ட அறிக்கை, வங்கிக் கணக்கு விவரம் ஆகிய ஆவணங்களை உடனடியாகச் சபையின் தலைமை அலுவலகத்தில் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ள முடியும் என்றும் சபையின் தலைவர் ந.திரிலோகநாதன் தெரிவித்துள்ளார். (ஐ-135)

## வணிக முதற்தேர்வு பரீட்சை

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ்பல்கலைக்கழகத்தின் வணிக முதற்தேர்வு வெளிவாரிப் பரீட்சைகள் ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

இப்பரீட்சைக்குத தோற்றவுள்ளோர் தமக்குரிய அனுமதி அட்டையையும் நேர அட்டவணையையும் வெளிவாரிப் பரீட்சைகள் அலகில் 2ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம் என்று பதிவாளர் தெரிவித்துள்ளார். (ஐ-10)

### உதயவாக்கு

பணம் மிகச் சிலரிடம் உள்ளது. பணவேட்டை ஏறக்குறைய எல்லோருடைய நெஞ்சிலும் உள்ளது. பண்பு மிகச் சிலரிடம் உள்ளது. பண்பைப் புறக்கணிக்கும் மனநிலை ஏறக்குறைய எல்லோருக்கும் உள்ளது.

- மு.வ

### நாளை

புரட்டாதி 15
ஞாயிற்றுக்கிழமை
*திதி:* சதுர்த்தி
பின் இரவு 12.26 வரை.
*நட்சத்திரம்:* விசாகம்
பின்னிரவு: 1.48 வரை.
சதுர்த்தி விரதம்
*சுபநேரம்:* 9.02 - 10.32
*ராகுகாலம்:* 4.32 - 6.02
(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# நவம்பர் 20 ஆம் திகதிக்கு முன்னர் இடர்காலக் கொடுப்பனவை வழங்குக

## தமிழர் ஆசிரியர் சங்கம் காலக்கெடு

திருகோணமலை, செப். 30

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான இடர்காலக் கொடுப்பனவு மற்றும் சம்பள நிலுவைக் கொடுப்பனவுகளை நவம்பர் 20 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கா விட்டால் தொழிற் சங்க நடவடிக்கை எடுக்கப் போவதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மாகாண ஆளுநருக்கு அறிவித்துள்ளது.

மாகாண ஆளுநருக்கு அனுப்பியுள்ள கடிதம ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதிபர், ஆசிரியர்களுக்கான 1999 ஆம் ஆண்டுக்குரிய இடர்காலக் கொடுப்பனவு, சம்பள நிலுவைக் கொடுப்பனவு ஆகியவற்றை வழங்குமாறு மாகாண ஆளுநரிடம் தமிழர்ஆசிரியர்சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் நேரடியாகக் கோரிக்கை விடுத்ததாகவும்-

இந்தக் கொடுப்பனவுகளை நவம்பர் மாதத்தில் வழங்க அவர் இணக்கம் தெரிவித்திருந்தார் என்றும்-சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கொடுப்பனவுகளை நவம்பர் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கவேண்டும் என்றும் —

அவ்வாறு வழங்காத பட்சத்தில் வடக்கு — கிழக்கில் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ளச் சங்கம் முடிவு செய்துள்ளது என்றும் — ஆளுநருக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் மகாசிவம் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் ஆளுநர் யாழ்ப்பாணம் வந்திருந்த சமயம் அவரைச் சந்தித்துக் கலந்துரையாடிய சமயம் இந்தக் கோரிக்கைகளை சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கமும் அவரிடம் விடுத்திருந்தார்.

(இ-3-8)


**புலமைப் பரிசில்-2001**

கடந்த வாரப் பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெற்றோர்

1. ந. திருத்தணிகன் யா. இ. ஆ. பா.
2. சி. ரகுராஜ் யா/மானிப்பாய் மெமோறியல் ஆ. பா.
3. ந. முகுந்தன்
4. உ. பிரியங்கா
5. ஜெ திரோஜன் யா. இ. ஆ. பா.

அடுத்த பரீட்சை நாளை

BOND யாழ்.நகர்.

(78885)


## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், செப். 30

சங்கானை இந்து இளைஞர் மன்றத்தின் சிறுவர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சோ. புவனதாஸ் தலைமையில் சிலம்புப்புளியடி ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதனும் கௌரவ விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி த. ஜெகதீஸ்வரி, சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர் எஸ். கைலாசநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

(க-29)


சாவகச்சேரி வாரியப்பர் சிவன்கோயில்

### கேதார கௌரி விரத நூல்

அமிர்தபாஷினி அம்பாளை நினைத்து பூஜையில் வைக்கப்படும் கௌரி நூலைப் பெறும் அடியவர்களுக்கும் ஏனைய தென்மராட்சி ஆலயங்களில் நூல் பெறுபவர்களுக்கும் என்னால் நூல் வழங்கப்படும். பெயர், நட்சத்திரம், முகவரி என்பவற்றைக் கடித மூலம் உடன் தெரியப்படுத்தவும். பூர்த்தி தினத்தில் யாழ். நல்லை ஆதீனம், நெல்லியடி ஸ்ரீ காளி கோயில், சித்தன்கேணி சிவன்கோயில் ஆகியவற்றில் வைத்து எம்மால் நூல் அணிவிக்கப்படும். மேலதிக விவரம் பின்னர் தனியாக அறிவிக்கப்படும்.

பண்டிதர் கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்

கல்லூரி வீதி,
வட்டுக்கோட்டை.

(சி/13133)



### வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

(பதிவு இலக்கம்:— ஜே/பி/2154)

### அறிவித்தல்

20 - 09 - 2000 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்ட நவாலி வடிசாலைக் களஞ்சிய சுற்றுமதில் கட்டுவதற்கான கேள்வி விளம்பரம் தொடர்பான திகதிகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளதை அறியத்தருகின்றேன்.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:-
11 — 10 — 2000 பிற்பகல் 2-00 மணி வரை

கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் திகதி:-
12 — 10 — 2000 முற்பகல் 11-00 மணிவரை

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி:-
12 — 10 — 2000 முற்பகல் 12-00 மணி

தலைவர்,
வலிகாமம் பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்
கொத்தணி மானிப்பாய்.

(சி-13128)



### காரைநகர் ப. நோ. கூ. சங்கம், காரைநகர்.

### அறிவித்தல்

கணக்காய்வு நிதியாண்டு

1-9-1997 — 31 8-1998

1-9-1998 — 31-8-1999

மேற்படி சங்கத்தின் குறிப்பிட்ட இரு நிதி ஆண்டுகளுக்கான கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டு இருப்பதனால் சங்கத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள், வாடிக்கையாளர்கள், கிராமிய வங்கியுடன் தொடர்புடையவர்கள் மேற்குறிப்பிட்ட திகதிகளில் வருமதி, செல்மதி மீதிகளை 20 10-2000க்கு முன்பதாக உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

= தலைவர்

பணிமனை,
ப. நோ. கூ. சங்கம்,
காரைநகர்,
29-9-2000.

(சி/13136)



### மரண அறிவித்தல்

### T. V. இராசையா

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், நீர்ப்பாசனத்திணைக்களம்)

நீராவியடி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், தற்பொழுது 19 1/3, மிலாகிரிய அவனியு, கொழும்பு - 6 இல் (T. P. No. 074 - 510402) வசித்தவருமாகிய தம்பிராசா வேலுப்பிள்ளை இராசையா அவர்கள் நேற்று (29 - 09 - 2000) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை — கனகம்மா ஆகியோரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும், ரதி, ராதாகிருஸ்ணன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr. சிவமூர்த்தி, விஜயா ஆகியோரின் மாமனாரும், துர்க்கா, மயூரன் ஆகியோரின் பேரனும், செல்லையா, சரஸ்வதி, இராசரத்தினம், பாலசிங்கம் காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் அருளானந்தம் ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஜெயரட்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, திங்கட்கிழமை (02 - 10 - 2000) இறுதிக் கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சகோதரர்கள்,
மருமக்கள்.

132, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(78878)



### கேள்வி அறிவித்தல்

### பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள்திணைக்களம்,(மாகாணம்)யாழ்ப்பாணம்

1. கீழ் வரும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலக கேள்விச் சபையினால் 2000 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 20 ஆம் திகதி முற்பகல் 10-30 மணிவரை யாழ்ப்பாணம், பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
2. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மானிப்பதற்கு தரம்- எம்9 இலும் அல்லது அதற்கு மேற்பட்ட, பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப்பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவார்.
3. ஒப்பந்தப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம் 537, சிவன் கோயில் வீதி, திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலியில் அமைந்துள்ள கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்று, கேள்விப்பத்திரங்களை 2000 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 13 ஆம் திகதி பிற்பகல் 3-00 மணிவரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| வேலைகளின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| 1. கிராமோதய வைத்திய அலுவலகம் புனருத்தாரண வேலை, சங்குவேலி. | 4,000/. | 500/- |
| 2. 350 மீற்றர் நீளமுடைய சுற்றுமதிலும் சேற்றும் நிர்மாணித்தல், கிராமோதய வைத்தியசாலை, உடுவில். | 3,500/- | 250/- |
| 3. 6' 0'' உள்விட்டமும் 25' 0'' ஆழமும் உடைய குடிதண்ணீர் கிணறு அமைத்தல் மத்திய மருந்தகம், உடுவில். | 1,200/- | 250/- |
| 4. சமையலறை திருத்த வேலையும் புனரமைப்பு வேலையும் சுற்றியல்கூறு வைத்தியசாலை, அச்சுவேலி. | 2,000/- | 250/- |
| 5. மத்திய மருந்தகத்தில் மண் நிரப்புதல், உடுவில் | 600/- | 100/- |
| 6. பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஆலோசனைக்கூட திருத்தவேலை, | 9,000/- | 500/- |
| 7. மாவட்ட வைத்தியசாலையில் வைத்திய அதிகாரி விடுதி திருத்தவேலை, வல்வெட்டித்துறை. | 6,200/- | 500/- |

5. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.
6. இவை தொடர்பான மேலதிக விவரங்களை ''நிறைவேற்றுப் பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம், மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை'' தற்காலிக முகவரியிலுள்ள காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

இ, சிறீகாந்தா,
பிரதம பொறியியலாளர்,
யாழ்ப்பாணம்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்),
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(இ/13131)

# ஈராக் மீதான தடைகளுக்கு சவூதியும் குவைத்துமே காரணம்!

## சதாம் குற்றச்சாட்டு

பாக்தாத்,செப்.30

ஈராக் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படுவதற்கு குவைத்தும் சவூதிஅரேபியாவுமே காரண கர்த்தாக்களாக விளங்கின என்று ஈராக் அதிபர் சதாம் ஹூசேன் குற்றம் சாட்டியுள்ளார்.

ஈராக் தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டி அளிக்கையிலேயே சதாம் இவ்வாறு தெரிவித்தார். இந்தத் தடைகளை அமெரிக்கா விதித்திருந்தாலும் கூட அதற்கு தூண்டுகோலாய் இருந்தவை சவூதியும் குவைத்துமே.

ஈராக் இவ்விரு நாடுகளுடனும் முரண்பட விரும்பவில்லை. ஆனால் இந்நாடுகள் ஈராக்குடன் முரண்படுகின்றன.

சவூதி மற்றும் குவைத் தலைவர்கள் ஈராக் மீதான பொருளாதாரத் தடை நீடிக்கப்படுவதற்கும் ஈராக்கியர்கள் கொல்லப்படுவதற்கும் ஊக்கமளித்து வருகின்றனர் எனவும் சதாம் மேலும் தெரிவித்துள்ளார். (க)



ஜோர்தான் மன்னர் அப்துல்லா தனது புதிய வாரிசுடன் காணப்படுகின்றார். அவரது மனைவி ராணியா, மகன் ஹூசெயின் (வயது 6), மகள் இமான் (வயது 4) ஆகியோரும் உடனிருக்கின்றனர். மன்னருக்கு கடந்த செவ்வாயன்று பெண் குழந்தை பிறந்தது.

# சுஹார்ட்டோவின் மகனுக்கு 18 மாத சிறைத் தண்டனை

ஜகார்த்தா,செப்.30

இந்தோனேசியாவின் முன்னாள் அதிபர் சுஹார்ட்டோவின் இளைய மகனுக்கு இந்தோனேசிய உச்ச நீதிமன்றம் 18 மாதகால சிறைத் தண்டனை வழங்கியுள்ளது.

1990ஆம் ஆண்டு இடம்பெற்ற காணி கொள்வனவு விவகாரத்தில் ஊழல் புரிந்ததாகவும் இதனால் அரசுக்கு 10 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நஷ்டம் ஏற்பட்டதாகவும் கூறித் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலேயே சுஹார்ட்டோவின் மகனான டொமியனுக்கும் அவரது நண்பரான லிக்காட்டோவுக்கும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

சுஹார்ட்டோவின் 32 வருட சர்வதிகார ஆட்சியில் பல்வேறு ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாக குற்றஞ் சாட்டப்பட்ட போதும், சுஹார்ட்டோவின் குடும்ப அங்கத்தவர் ஒருவருக்கு சிறைத்தண்டனை வழங்கப்படுவது இதுவே முதல் தடவையாகும். (க)

# இந்தியாவுடன் இணைந்து அதி நவீன போர் விமானங்களை ரஷ்யா தயாரிக்கும்!

இந்தியாவுடன் இணைந்து ஐந்தாவது தலைமுறை அதி நவீன பல் நோக்குப் போர் விமானங்களை தயாரிக்க ரஷ்யாவின் சுக்கோய் விமான நிலையம் ஆர்வம் தெரிவித்துள்ளது.

இந்தியா ரஷ்யாவுடன் இணைந்து கூட்டாக போர் விமான உற்பத்தியில் ஈடுபட சம்மதம் தெரிவிக்குமானால் இந்தப் போர் விமானத்தை தயாரிக்கத் தயாராக உள்ளதாகவும் -

இந்தியாவின் அதிகரித்து வரும் தொழில்நுட்ப வல்லமை, செழுமையான மனித ஆற்றல் என்பவற்றுடன் உயர் நுட்ப தொழிற்றிறன் பெற்ற நிபுணர்களின் வளம் என்பன நவீன போர் விமானங்களை வடிவமைப்பதற்கு அடித்தளமாக அமையும் என்றும் -

சுக்கோய் விமான நிலைய செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

எஸ்37 பேர்கூட் விமானத்தின் வெள்ளோட்டம் நடைபெற்று வருவதாகவும் -

ஐந்தாவது தலைமுறை ரஷ்யப் போர் விமானத்துக்கு அடிப்படை தொழில்நுட்பத்தை உருவாக்கும் சோதனைக் கூடமாக இது அமையும் எனவும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

# பெனாஸிர் பூட்டோவின் கணவனது சொத்து விவரம் வெளியிடப்படும்

லண்டன்,செப்.30

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் கணவர் அஸீஸ் அலி சர்தாரின் சொத்து விவரங்களை வெளியிட பிரிட்டனின் உள்துறை அமைச்சர் ஜாக் ஸ்ட்ரோ சம்மதம் தெரிவித்துள்ளார்.

இந்த சொத்து விவரங்களை பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் பெர்வேஷ் முஷாரப்பின் அதிகாரிகளிடம் கையளிக்கவும் அவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

பெனாஸிர் பூட்டோவின் கணவர் அலி சர்தாரி தற்போது சிறையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. (க)

## ராஜ்குமார் விவகாரத்தில் திருப்பம்

# வீரப்பன் பிடியில் இருந்து நாகப்பா தப்பி வந்தாரா? விடுவிக்கப்பட்டாரா?

# தெளிவான தகவலை அவர் வெளியிடவில்லை

சென்னை,செப்ரெம்பர்30

**நடிகர் ராஜ்குமாருடன் சேர்த்து கடத்தப்பட்டவர்களில் ஒருவர் வீரப்பனின் பிடியில் இருந்து தப்பி வந்ததை அடுத்து இந்த விவகாரத்தில் திருப்பம் ஏற்பட்டிருக்கிறது.**

**காட்டில் இருந்து திரும்பியுள்ள நாகப்பா தப்பி வந்தாரா அல்லது வீரப்பனால் விடுவிக்கப்பட்டாரா என்பது குறித்து குழப்பமான தகவல்கள் வெளியாகி உள்ளன.**

**நடிகர் ராஜ்குமாரை விடுவிக்கும் முயற்சிகளில் இது தாமதத்தையும் பாதிப்பையும் ஏற்படுத்தலாம் என்று தமிழக அரசு வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.**

ராஜ்குமாருடன் சேர்த்துக் கடத்தப்பட்ட மூவரில் ஒருவரான திரைப்பட இயக்குநர் நாகப்பா என்பவர் நேற்றுமுன்தினம் அதிகாலை காட்டில் இருந்து தப்பி அன்று பிற்பகல் தமிழ்நாட்டின் ஈரோடு பகுதியை வந்தடைந்தார். இவர் தற்போது தமிழக மற்றும் கர்நாடக உயர் பொலிஸ் அதிகாரிகளின் பாதுகாப்பில் உள்ளார்.

தான் தப்பி வந்தது எப்படி என்பது குறித்தோ, ராஜ்குமாரின் விடுதலை தொடர்பாகவோ நாகப்பா உடனடியாக தகவல் எதனையும் வெளியிடவில்லை என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

நாகப்பா துணிகர நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு வீரப்பனின் பிடியில் இருந்து தப்பியதாக ஒரு தகவல் தெரிவிக்கின்றது. அதே வேளை நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட நாகப்பாவை திருப்பி அனுப்ப அனுமதிக்க வேண்டும் என ராஜ்குமார் வீரப்பனிடம் கோரி வந்ததாகவும் அதனைத் தொடர்ந்தே நாகப்பா விடுதலை செய்யப்பட்டதாகவும் மற்றொரு தகவல் தெரிவித்தது.

நாகப்பா வெளியிடும் தகவல்களை அடுத்து கர்நாடகாவில் வன்முறைச் சம்பவங்கள் வெடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த ஜூலை மாதம் கஜனூரில் உள்ள நடிகர் ராஜ்குமாரின் பண்ணை வீட்டில் இருந்து ராஜ்குமார் உட்பட நால்வர் வீரப்பனால் கடத்திச் செல்லப்பட்டனர். நடிகரை விடுவிக்கும் முயற்சியில் தமிழகம் மற்றும் கர்நாடக அரசுகள் இணைந்து 'நக்கீரன்' கோபாலை வீரப்பனுடன் பேச்சுக்களை நடத்த அனுப்பின. நடிகரின் விடுதலைக்கு 14 கோரிக்கைகளை வீரப்பன் விடுத்திருந்தார். அதில் தடா கைதிகளின் விடுதலையில் வீரப்பன் மிகவும் உறுதியாக இருந்து வந்ததைத் தொடர்ந்து பணயக் கைதிகளின் விடுதலை தாமதமாகி வருவது தெரிந்ததே. (க)

## நாகப்பா தப்பியது பெரும் ஆச்சரியம்

# நடிகர் ராஜ்குமார் விடுதலையை பாதிக்காது என்கிறார் முதல்வர்

சென்னை,செப்.30

வீரப்பனின் பிடியில் இருந்து நாகப்பா தப்பிவந்தது தமக்கு ஆச்சரியமளிப்பதாகவும் எனினும் நடிகர் ராஜ்குமாரை விடுவிக்கும் முயற்சிகளை இது பாதிக்கமாட்டாது என்றும் தமிழகமுதலமைச்சர் மு.கருணாநிதி நேற்று கருத்து வெளியிட்டார்.

சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.



நடிகருடன் கடத்தப்பட்ட அனைவரையும் விடுவித்துக் கொண்டுவரலாம் என்ற நம்பிக்கையுடன் 'நக்கீரன்' கோபால் நான்காவது முறையாக வீரப்பனிடம் சென்றுள்ள வேளையில் நாகப்பா தப்பிவந்ததற்கான காரணம் விளங்கவில்லை என்றும் -

ராஜ்குமாரையும் ஏனைய மூவரையும் வீரப்பன் நன்றாக கவனித்துக் கொண்டதாக நாகப்பா கர்நாடக பொலீஸாரிடம் தெரிவித்திருப்பதாகவும் முதல்வர் கூறினார்.

பொலீஸாரைப் பயன்படுத்தி வீரப்பன் மீது நடவடிக்கை எடுக்கும் திட்டமேதும் உண்டா எனச் செய்தியாளர் கேட்டதற்கு அம்மாதிரியான ஏற்பாடு ஏதும் இல்லை. 'நக்கீரன்' கோபால் திரும்பி வந்த பின் தான் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

# த.மா.காவினரை கைது செய்ய தமிழகப் பொலீஸார் மறுப்பு!

## மூப்பனார் விசனம்!!



சென்னை,செப்.30

சாலை மறியல் போராட்டத்தில் பங்கேற்ற த.மா.காவினரின் எண்ணிக்கையைக் குறைத்துக் காட்டுவதற்காக அவர்களை பொலீஸார் கைது செய்ய மறுத்துவிட்டதாக மூப்பனார் விசனம் தெரிவித்துள்ளார்.

மத்திய மாநில அரசுகளை கண்டித்து மாநிலம் தழுவிய சாலை மறியல் மற்றும் சிறை நிரப்பும் போராட்டத்தை கடந்த புதன்று த.மா.கா. நடத்தியது.

போராட்டத்தின் முடிவில் அக்கட்சியின் தலைவர் மூப்பனார் செய்தியாளர்களிடம் பேசுகையில் தமிழகத்தின் 234 தொகுதிகளிலும், 1 லட்சத்து 50 ஆயிரம் தொண்டர்கள் போராட்டத்தில் பங்கேற்றதாகவும், ஆனால் எண்ணிக்கையைக் குறைத்துக்காட்ட 45,000 பேரை மட்டுமே பொலீஸார் கைது செய்ததாகவும், தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட த.மா.கா.தொண்டர்கள் 15 நாள் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் த.மா.காவின் முக்கிய தலைவர்கள் கைது செய்யப்பட்டு உடன் விடுவிக்கப்பட்டதாகவும் - பொலீஸார் கூறியுள்ளனர்.

## உலக அரங்கில்

### இளநீரிலிருந்து சக்தி தரும் பானம்

இளநீரில் இருந்து விளையாட்டு வீரர்களுக்கு உடனடி சக்தி வழங்கும் பானத்தைத் தயாரிக்கும் வழிமுறையைக் கண்டுபிடித்து இந்திய உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு சர்வதேசக் காப்புரிமை பெற்றுள்ளது.




சுரேஸ் பிரேமச்சந்திரன்

தமிழ் மக்களை வதைக்கும் அவசரகாலச் சட்டத்தை இல்லாதொழிக்க

தோடம்பழச் சின்னத்துக்கு வாக்களியுங்கள்

| | | |
|---|---|---|
| சுயேச்சைக் குழு - 1 | | X |
| நடராசா அலெக்சாண்டர் ஜெயக்கொடி | இல. | X |



நடராசா அலெக்சாண்டர் ஜெயக்கொடி இல. 8

(78247)

ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஸ் தலைமை)

# உணவகங்கள், தேநீர்க் கடைகளில் சுகாதாரம் பேணுமாறு அறிவுறுத்து

சண்டிலிப்பாய், செப். 30

வலி. தென் மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் இயங்கி வரும் உணவகங்கள் தேநீர்க் கடைகள், குளிர்பான உற்பத்தி நிலையங்கள், பேக்கறிகள் ஆகியன சுத்தமாகவும், சுகாதார விதிகளுக்கு ஏற்ற வகையிலும் இயங்கவேண்டும். இவற்றை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை மானிப்பாயில் உள்ள வலி. தென்மேற்குப் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற உணவகங்கள், தேநீர்க் கடைகள், குளிர்பான தயாரிப்பு நிலையங்கள், பேக்கறிகள் ஆகியவற்றின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடலிலேயே சுகாதார அதிகாரிகளினால் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

உணவு வகைகளைக் கையாளும் தொழிலாளர்களுக்கு மருத்துவப் பரிசோதனை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. கணேஸ்வரராசா தெரிவித்தார். சுகாதார சீர்கேடுகளை நீக்குவதற்கு கடை உரிமையாளர்கள் சிலர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறிப்பிட்ட கால அவகாசம் வழங்கப்பட்டது. இக்கால எல்லைக்குள் சுகாதார சீர்கேடுகளை நீக்காமலிருக்கும் உணவகங்கள், பேக்கறிகள் ஆகியன மீது சட்ட நடவடிக்கை எடுப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் பண்டத்தரிப்பு பொதுச் சுகாதார பரிசோதகர் பொ. சிவரூபன். மானிப்பாய் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். வருணைநாதன், ஆனைக்கோட்டை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வி. தயாமோகன், நவாலி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். பரமேஸ்வரன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள். (ஐ–135)

## சனசமூக நிலைய கட்டடம் திறப்பு

வலி. கிழக்கு, செப். 30

கோப்பாய் தெற்கு முழுமதி சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா எதிர்வரும் 4 ஆம் திகதி புதன் கிழமைகாலை 10.30 மணிக்கு நிலையத் தலைவர் நா. இராசரத்தினம் தலைமையில் நடைபெறும்.

வலி. கிழக்குப் பிரதேச சபையின் உபதலைவர் எல். ரவி கட்டடத்தினைத் திறந்து வைப்பார். (ஐ-180)

## முதியோர் தின நிகழ்ச்சி

நவாலி, செப். 30

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடத்தும் முதியோர் வார நிகழச்சி ஒக்ரோபர் 4 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.30 மணி முதல் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

பிரதேசசெயலர் நா. வேதநாயகன் தலைமையில் இடம் பெறும் இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற சங்கானைப் பிரதேச செயலர் கா. சந்திரராசாவும் சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. தனபாலசிங்கமும் கலந்து கொள்வார்கள். (ஐ-100)

## மட்டக்களப்பில் பஸ் விபத்து இருவர் பலி!

மட்டக்களப்பு, செங்கலடிப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை பயணிகள் பஸ் ஒன்று குடை சாய்ந்ததில் இடம் பெற்ற விபத்தில் இரண்டு பயணிகள் பலியானார்கள். 28 பேர் காயமடைந்தனர்.

பஸ்ஸில் அளவுக்கு அதிகமாகப் பயணிகள் ஏற்றப்பட்டதாலேயே விபத்து இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-9)

---

## அவசர கலந்துரையாடல்

றெயில்வே கடவை ஊழியர்களின் கொடுப்பனவு தொடர்பான அவசர கலந்துரையாடல் எதிர்வரும் 02 – 10 – 2000 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் ஸ்ரீதர் தியேட்டரில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. ஊழியர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

ஜே. பத்மநாதன்
(அழைப்பாளர்)

(78857)

---

## நீங்கா நினைவில் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 19 — 01 — 1937

உதிர்வு 12 — 10 — 1999

### அமரர் சண்முகம் வெற்றிவேல்

(பலசரக்குக் கடை உரிமையாளர்
துர்க்காபுரம் - தெல்லிப்பழை)

திதி:- 30 - 09 - 2000

எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய் நின்ற எங்கள் தெய்வத்தின் ஆன்மா சாந்திபெற துர்க்கை அம்மனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் வாடும்
- குடும்பத்தினர்

தகவல்:
வெ. கெங்காதரன் (மகன்)
துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.

(78763)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் செல்லர் புவனேஸ்வரன்

(ஜேர்மனி)

மலர்வு 1949 - 07 - 10

உதிர்வு 1999 - 10 - 12

பாசத்தின் உறைவிடமாய் பண்பின் நிலைக்களனாய் விளங்கிய எங்கள் குடும்பத்தின் அணையாத தீபமே! ஆண்டு ஒன்று தான் என்ன ஆயிரம் தான் சென்றாலும் ஆறிடுமோ உங்கள் துயர்.

இன்று (30 - 09 - 2000) நடைபெறும் ஆண்டுக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
தாய் - பாக்கியம்,
சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனன்மார், மைத்துனிமார்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்,

(78866)

---

## வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு

எமது கழகத்தினால் 02 – 04 – 2000 இல் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் வைத்தியசாலை அபிவிருத்திச்சங்க ஆதரவுடன் நடத்தப்பட்ட கண் பரிசோதனை முகாமில் பரிசோதிக்கப்பட்டவர்களுக்கு மேற்படி வைத்தியசாலையில் நாளை (01-10-2000) ஞாயிறு மு. ப. 10. 00 மணிக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படும்.

குறிப்பு:- அன்றைய தினம் கண்ணாடி வழங்கப்பட இருப்பவர்களின் பெயர் விவரங்களை வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் பார்வையிடலாம்.

தலைவர்,
வடமராட்சி லயன்ஸ் கழகம்,

(சி/13125)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது கழகத்தின் கழக விஸ்தரிப்புத் தலைவராகவும், கழகத்தை உருவாக்கப்பாடுபட்டவரும் கோப்பாய்க் கழகத்தின் ஸ்தாபக உறுப்பினரும் தலைவருமாகிய

### லயன் எஸ். செல்வரட்னம்

அவர்கள் காலமான செய்தி கேட்டு அதிர்ச்சியும், கவலையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர் குடும்பத்தினருக்கு எமது கழக சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நல்லூர் லயன்ஸ் கழகம்
(சி/13124)

---

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1973 — 02 — 07

மறைவு 1996 — 06 — 30

அமரர்

### சண்முகநாதன் சிவகுமார்

உற்ற நாலாண்டு ஓடினவே சிவகுமாரா!
பெற்ற என் வயிறு பேயாய்த் துடிக்குதடா
இற்றைவரை உன் நினைவு ஓயாதடா நாளும்
பெற்ற செல்வனின் ஆத்மா பெறுகவே நற் சாந்தி!

அம்மா, அத்தான், அக்கா,
தங்கை, மச்சான்.

சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(78874)

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000

## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம்

*எமது அன்பிற்கினிய மக்களே!*



எமது தேசத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள யுத்தத்தினால் உங்கள் இயல்பு வாழ்வு சிதறடிக்கப்பட்டு அகதி வாழ்வே வாழ்க்கையாகிவிட்டது. இச் சூழலில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி உங்கள் நாடாளுமன்றப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான பாரிய கடமை உங்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் நீண்டகால அரசியலுரிமைப் பிரச்சினைக்கு நடைமுறைச் சாத்தியமான வழியில், கௌரவமான அரசியற் தீர்வினைத் துணிச்சலுடன் முன்வைத்து அதனை நிறைவேற்றுவதற்காக ஜனநாயக வழிமுறையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)யினராகிய நாம் வாதாடியும் போராடியும் வருகின்றோம்.

அதேவேளை, யுத்தம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள சூழ்நிலையில் மக்களாகிய உங்களுக்கு உருவாகிவரும் அன்றாடப் பிரச்சினைகளையும் பெருமளவில் தீர்த்து வருவதுடன் தொடரும் யுத்தச் சூழ்நிலைமையையும் மீறி யாழ். மண்ணின் அபிவிருத்திப் பணிகளிலும் பங்காற்றி வருவதை பெருமையுடன் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். எமது மக்களுக்கான இந்தச் சேவைகளைத் தொடர்ந்தும் இன்னும் அதிகமாக, ஆற்ற ஈ.பி.டி.பி. உறுதிபூண்டுள்ளது.

தொடரும் யுத்தச் சூழ்நிலையினால் அவலத்துக்குள்ளாகும் உங்களை விட்டு ஓடி ஒளித்துக் கொள்ளாது, மக்களோடு மக்களாக நின்று உங்களுக்கு தொடர்ந்து சேவையாற்ற அரசுடன் ஜனநாயக வழிமுறையில் வாதாடியும், போராடியும் வருவதுடன் எதிர்காலத்திலும் தமிழ் பேசும் மக்களுக்குரிய உரிமைகளைப் பெறவும், தமிழ் பேசும் மக்கள் அனுபவிக்கும் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவும், வல்லமையுள்ளவர்கள் ஈ.பி.டி.பியினரே என்பதை நீங்கள் அறிவீர்கள்.

உங்கள் எண்ணமே எங்கள் எண்ணம்! இவ்வகையில் உங்கள் உரிமைக்குக் குரலும் உறவுக்குக் கரமும் கொடுத்துவரும் ஈ.பி.டி.பியினரை உங்கள் வருங்கால நாடாளுமன்றப் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யுங்கள்!

**எனவே உங்கள் வாக்குகளை ஈ.பி.டி.பியின் வீணைச் சின்னத்துக்கு அளித்து எமது கரங்களைப் பலப்படுத்துங்கள்!**

- உங்கள் வாக்குகள், யுத்தமற்ற நிம்மதியான வாழ்வுக்காக, கௌரவமான அரசியற் தீர்வை எட்டுவதற்காக!
- உங்கள் வாக்குகள், அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்து இயல்பு வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்புவதற்காக!
- உங்கள் வாக்குகள் தமிழ் பேசும் மக்களின் புதிய அரசியற் தலைமைக்காக!



மக்கள் சேவையிலுள்ள,

**கே.என். டக்ளஸ் தேவானந்தா**
*செயலாளர் நாயகம், ஈ.பி.டி.பி.*

## I. அரசு, சட்டம், ஒழுங்கு

1. தமிழ் பேசும் மக்களுடைய அரசியற் பிரச்சினைக்கு தீர்வாக ஈ.பி.டி.பியினால் முன்வைக்கப்பட்டுள்ள, ஐக்கிய இலங்கைக்குள் வடக்கு கிழக்கு மாகாணங்கள் எக்காலத்திலும் பிரிக்கப்படாத *"ஈழமாநிலத்திற்கான"* விசேட அதிகாரங்களை உள்ளடக்கிய சுயாட்சியைக் கொண்ட ஒரு நிர்வாக அலகை எமது அரசியற் செயற்பாட்டின் மூலம் தொடர்ந்து தீவிரமாக முன்னெடுத்துப் பெற்றுக்கொள்ளல்.

2. *"ஈழமாநிலத்திற்கென"* பகிர்ந்தளிக்கப்படவுள்ள விசேட அதிகாரங்களை உள்ளடக்கிய விடயங்கள் வாயிலாக பின்வருவனவற்றை உறுதிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

2.1 *"ஈழமாநிலத்தில்"* உள்ள அரச காணிகளில் குடியேற்றங்களை ஏற்படுத்தித் தமிழ் பேசும் மக்களின் பொருளாதார வளங்கள் சுரண்டப்படுவதையும் இனவிகிதாசார சமநிலையை மாற்றியமைத்து எமது மக்களின் அரசியற் பலத்தை முறியடிக்கும் நடவடிக்கைகளையும் தடுத்திடுவதற்கான ஏற்பாடு செய்தல்.

2.2 (A) கல்வி, விவசாயம், மீன்பிடி, சுகாதாரம், நீர்ப்பாசனம், உள்ளகக் கட்டமைப்பு, அரச காணி, வீடமைப்பு ஆகிய அதிகாரங்களை முழுமையாக *"ஈழ மாநிலத்திற்கு"* உரியவையாக செயற்படுத்தல்.

(B) மின்சாரம், கைத்தொழில் ஆகியவை காலகட்டத்தில் *"ஈழமாநிலத்திற்குரிய"* அதிகாரங்களாக செயற்படுத்தல்.

2.3 *"ஈழமாநிலத்தில்"* இஸ்லாமிய மக்களின் அரசியல் ஜனநாயக, கலாசார உரிமைகளைப் பாதுகாக்கக்கூடிய வகையிலும் வளர்த்தெடுக்கக்கூடிய வகையிலும் இஸ்லாமிய மக்களின் அகச் சுயாதிக்கத்தை உறுதிப்படுத்த விசேட ஏற்பாடு செய்தல்.

2.4 பிராந்திய பொதுச்சேவையைச் சேர்ந்தவர்களுடைய நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம் போன்ற சகல விடயங்களுக்குமான அதிகாரம் கொண்ட பிராந்தியப் பொதுச்சேவை ஆணைக்குழுவை நியமித்தல்.

2.5 நேரடி வெளிநாட்டுக் கடன்கள், முதலீடுகள், நன்கொடைகளை *"ஈழமாநில"* நிர்வாகம் நேரடியாகவே பேசிப் பெற்றுக்கொள்ள வழிசெய்தல்.

2.6 *"ஈழமாநிலத்திற்"*குட்பட்ட சட்டம், ஒழுங்கு தொடர்பான சகல விடயங்களும் *"ஈழமாநிலத்தின்"* அதிகாரங்களுக்குட்பட்டவையாக இருக்க உறுதிசெய்தல்.

3. தமிழ் பேசும் மக்களுக்கு மத்திய அரசின் அதிகாரங்களில் பின்வரும் விடயங்களில் பங்குகொள்ள ஈ.பி.டி.பி. நடவடிக்கை எடுக்கும்.

3.1 இலங்கையர் சமுதாயம் பல்லின, பல்மொழி, பல்மத இயல்பினைக் கொண்டுள்ளது என்பதை அரசமைப்பு மூலம் உறுதிப்படுத்தல்.

3.2 இலங்கை முழுவதிலும் சிங்களமொழியுடன் தமிழ்மொழிக்குரிய சமத்துவத்தை அதன் பிரயோக நிலையில் உறுதிசெய்தல்.

3.3 அமைச்சுகளிலும் திணைக்களத் தலைமைக் காரியாலயங்களிலும் மற்றும் 12.5 வீதத்திற்கு மேலாக தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்ற பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குள் இருக்கும் சகல அரச நிறுவனங்களிலும் உள்ள தேசிய ஆவணங்களை தமிழ் மொழியிலும் பேண நடவடிக்கை எடுக்கப்படும்.

3.4 சிங்கள மொழியிலான தேசிய கீதத்திற்குரிய அதே அந்தஸ்தை தமிழ் மொழியிலான தேசிய கீதத்திற்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

3.5 இலங்கையர் சமுதாயம் பல்லின, பல்மொழி, பல்மத இயல்பினைக் கொண்டுள்ளது என்பதை தேசியக் கொடியில் பிரதிபலிக்க நடவடிக்கை எடுத்தல்.

3.6 தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தல்.

3.7 சகல பிராந்தியங்களிலும் அமையவிருக்கும் பிராந்திய பொலீஸ் சேவையில் தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தல்.

3.8 தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து பெரும்பான்மையாக வாழ்கின்ற வெளிநாடுகளில் அவர்களுடனான வர்த்தக உறவு மற்றும் நலன்களைப் பாதுகாப்பதற்கும் கலாசார நடவடிக்கைகளை பேணி வளர்க்கவும் அந்நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் ஒரு பிரிவை ஏற்படுத்தி இப்பிரிவின் செயற்பாடுகளை *"ஈழமாநில"* நிர்வாகத்திற்கு உட்பட்டதாக்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல்.

3.9 இலங்கையைத் தாயகமாகக் கொண்ட குடியுரிமை மறுக்கப்பட்ட இந்திய வம்சாவழியினர் குடியுரிமை பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3.10 துணை ஜனாதிபதிகள் (ஜனாதிபதி சிங்கள இனத்தைச் சார்ந்தவராயின்) தமிழ் முஸ்லீம் இனத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதோடு அவர்களது தெரிவு அவ்வவ் இனப் பிரதிநிதிகளின் அங்கீகாரத்துடன் தெரிவுசெய்யப்படுவதை உறுதிப்படுத்தல்.

3.11 தமிழ் பேசும் மக்களின் இனவிகிதாசாரத்தின் அடிப்படையில் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

3.12 முப்படைகளிலும் இனவிகிதாசாரத்தின் அடிப்படையில் தமிழ் பேசும் மக்களின் பங்கு அமைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

3.13 தமிழ் பேசும் மக்களின் இனவிகிதாசாரத்தின் அடிப்படையில் மத்திய அரசின் மந்திரிசபை அமைவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

3.14 மத்திய அரசாங்க சேவையின் ஒவ்வொரு துறையிலும் இனவிகிதாசாரத்தின் அடிப்படையில் ஊழியர்கள் சேவையில் இருப்பதை உறுதிசெய்யும் வகையில் நியமனங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

3.15 உச்ச நீதிமன்றம், மேல் நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்களுக்குரிய பதவிகளை இனவிகிதாசாரத்தின் அடிப்படையில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4. யுத்தத்துக்கு முடிவுகாண புலிகளும் அரசும் பேச்சுவார்த்தையில் ஈடுபட தேசிய ரீதியிலும் இந்தியா, நோர்வே உட்பட சர்வதேச ரீதியிலும் அழுத்தம் உருவாக்கவும் தலையிடவும் ஈ.பி.டி.பி. முழுமூச்சுடன் செயற்படும்.

(8ஆம், 9ஆம் பக்கங்களைப் பார்க்க)

**வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!**

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000

# ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம்

5. இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் அரசியற் பிரச்சினைக்கு அவர்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதும் தீர்க்கமானதுமான தீர்வு ஒன்றை முன்வைக்கும் அல்லது ஆதரிக்கும் தென்னிலங்கைக் கட்சிகளுடன் இணைந்து செயற்படுவதுடன் எக்காலத்திலும் பிரிக்கப்படாத வடக்கு கிழக்கு *"ஈழமாநிலத்தில்"* வாழும் அனைத்து மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கும் உடனடித் தீர்வு காண்பதிலும் ஈ.பி.டி.பி. முன்னின்று உழைக்கும்.

6. தமிழ் பேசும் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்வருகின்ற சக தமிழ், முஸ்லீம் அரசியற் கட்சிகளுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண ஆலோசனைகளைப் பகிர்ந்து அவர்களுடன் இணைந்து செயற்பட ஈ.பி.டி.பி. முன்வரும்.

7. நாடு தழுவிய அளவில் தமிழ் மக்கள் மீதான அநாவசியப் பாதுகாப்புக் கெடுபிடிகளை நிறுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

8. யுத்தம் சம்பந்தமான நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயமான நஷ்ட ஈட்டைத் தாமதமின்றி வழங்க ஏற்பாடு செய்தல்.

9. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீதி விசாரணையின்றிச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டவர்களை உடன் விசாரிக்க அல்லது விடுதலை செய்ய நடவடிக்கை எடுத்தல்.

## II. கல்வி

1. கல்வியில் முன்னணி வகித்த யாழ்ப்பாணத்தின் இன்றைய கல்வி நிலையை மீளவும் நன்நிலைக்கு உயர்த்துவதற்கு யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் அபிவிருத்தியில் விசேட கவனம் செலுத்தப்படும். பின்தங்கிய பாடசாலைகளிலும் அண்மைக்கால அனர்த் தங்களினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளைக் கட்டியெழுப்புவதிலும் விசேட கவனம் செலுத்தப்படும்.

2. யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே கணனி, ஆங்கில அறிவை மேம் படுத்த பாடசாலைகள் தோறும் கணனி வகுப்புகள், விசேட ஆங்கில வகுப்புகள் ஆரம்பிப்பதற்கு விசேட ஏற்பாடு செய்யப்படும்.

3. யாழ்.மாவட்டத்தில் நிகழும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை கஷ்டப் பிரதேசங்களாகிய தீவுப்பகுதி, வடமராட்சி கிழக்கு, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிப்பதில் விசேட கவனம் எடுக்கப்படும். ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய புதிய ஆசிரிய நியமனங்கள், பட்டதாரிகள், தொண்டர் ஆசிரியர்கள், ஆரம்ப ஆசிரியர்கள் மட்டத்தில் இருந்து வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

4. முன்பள்ளிக் கல்விச் செயற்பாடுகளை விருத்தி செய்யும் முகமாக முன்பள்ளிக் கல்வியில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நியாயமான சம்பளப்படி உட்பட நிரந்தர நியமனம் வழங்க ஏற்பாடு மேற்கொள்ளப்படும்.

5. கல்வியியல் கல்லூரிக்கு உலக வங்கியினால் ஒதுக்கப்பட்ட நிதியுதவியுடன் சகல வசதிகளுடன் கூடிய புதிய கட்டடத் தொகுதி விரைவில் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படும். மீன்பிடியியல் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதன் செயற்பாட்டுக் காலம் வரையும் செயற்பட உலக வங்கியின் உதவியுடன் புனர்நிர்மாணிக்கப்பட்டு விருத்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

6. யாழ். தொழில்நுட்பக் கல்லூரி, உயர் தொழில்நுட்பக் கல்லூரி ஆகியன நவீன தேவைகளுக்கேற்ப உரிய உட்கட்டுமானங்களுடன் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

7. யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் சர்வதேச தரத்துக்கு ஈடாக வளர்வதற்கு சகல வளங்களை பெற்றுக்கொடுக்கவும் புதிய பீடங்களை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

8. ஏற்கனவே இனம் காணப்பட்ட பொறியியற்பீடத்தை விரைந்து உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

9. மூன்றாம் நிலைக் கல்விச் செயற்பாடுகளை **(Tertiary Educational Activities)** எமது பிரதேசத்தில் வளர்த்தெடுக்க முன்னின்று உழைத்தல்.

10. இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் இன்று நிலவும் குறைபாடுகளை அகற்றி அதன் செயற்பாடுகளை விஸ்தரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

11. சிங்களப் பேரினவாதிகளால் 1981ஆம் ஆண்டு எரிக்கப்பட்ட யாழ்.பொதுநூல் நிலையம் மீண்டும் அதே பொலிவுடன் திகழ நடவடிக்கை எடுக்கப்படும்.

12. எமது பிரதேசத்துக்குரிய இடைநிலைக் கைத்தொழில்களுக்கான பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

13. நவீன கல்விச் செல்நெறியுடன் ஆசிரியர் தரத்தினை உயர்த்துவதற்கு ஆசிரியர் நிலையங்களை தொழிற்பட வைப்பதுடன் சிறப்பாக நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

14. யுத்த சூழலில் வாழும் *"ஈழமாநிலத்தில்"* உள்ள பாடசாலை மாணவர்களின் போஷாக்கு இன்மையை நிவர்த்தி செய்திட சர்வதேச நிறுவனங்களின் உதவியுடன் விசேட சத்துணவுத் திட்டம் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

## III. விளையாட்டு

1. யாழ் மாவட்டத்தில் விளையாட்டுத் துறையினை விருத்தி செய்ய பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2. நவீன வசதிகளுடன் கூடிய விளையாட்டரங்கு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3. அனைத்து வசதிகளும் உடைய உள்ளக விளையாட்டரங்கு நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## IV. விவசாயம், நீர்ப்பாசனம்

1. விவசாயிகளது விளைபொருள்களை யாழ். குடாநாட்டிற்கு வெளியே சந்தைப்படுத்தி உரிய இலாபத்தைப் பெற கொள்வனவு வசதி, களஞ்சிய வசதி, போக்குவரத்து வசதி ஒழுங்குகள் செய்யப்படும்.

2. விவசாயிகளுக்கு தேவையான உள்ளீடுகள், உரிய நேரத்தில், உரிய அளவில், நியாயமான விலையில் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்படும். இவற்றில் உரவகைகளுக்கு விசேட முன்னுரிமை அளிக்கப்படும்.

3. விவசாயச் செயற்பாட்டில் நவீன தொழில்நுட்பங்களை புகுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், விவசாயச் செயற்பாட்டிற்குரிய நிர்வாகம், விவசாயப் பயிற்சி, விவசாய ஆய்வு மற்றும் விவசாய சேவைகள் ஆகியன நவீன முறையில் விஸ்தரிக்கப்படும்.

4. யாழ். குடாநாட்டில் மீண்டும் மண் வளப் பரிசோதனை நிலையம் சகல வசதிகளுடன் இயங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

5. விவசாயிகள் விவசாயக் கடன்களை குறைந்த வட்டியில் பெற்றுக்கொள்ள வசதி அளிக்கப்படும்.

6 இதுவரை காலமும் செலுத்தி முடிக்கப்படாத விவசாய வங்கிக் கடன்களை இரத்து செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

7. எமது பிரதேசத்தில் கமநல வங்கிகள் திறக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

8. சண்டிலிப்பாய், கரவெட்டி ஆகிய பிரதேசங்களில் புதிய கமநலசேவை நிலையங்கள் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

9. விவசாயிகளுக்கு உதவி புரிந்து பிரதேச விவசாய அபிவிருத்திக்கு உதவுவதற்காக ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளிலும் ஒருவர் என்ற அடிப்படையில் 435 விவசாய உதவியாளர்களை (கொவி செவன நியமகே) யாழ் மாவட்டத்தில் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

10. விவசாயக் குடும்பங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த விவசாயக் குடும்பங் களுக்கான விசேட வேலைத் திட்டம் அமுல்படுத்தப்படும்.

11. குடாநாட்டில் உள்ள பனை, தென்னை வளங்களை பாதுகாப்பதற்கு வருடாந்தம் ஒரு லட்சம் தென்னை, பனை மரங்கள் நாட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை பரந்தளவில் பயன்தரும் மரங்கள் நாட்டும் திட்டம் விசேட கவனத்தின் கீழ் அமுல் படுத்தப்பட்டு குடாநாட்டு வனவளம் பேணப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

12. விவசாய அபிவிருத்திக்கும் நிலத்தடி நீர்மட்ட உயர்விற்குமாக வழுக்கியாறை அடிப்படையாகக் கொண்டு புதிய குளங்கள் அமைக்கப்படுவதுடன் செயற்பாட்டிலுள்ள குளங்களும் ஆழமாக்கப்படும்.

13. உவர் நீரால் பாதிக்கப்படும் விவசாயச் செய்கை நிலங்கள் உவர் நீரால் பாதிக்கப்படுவதை தடுப்பதற்கு புதிய உவர் நீர் தடுப்பான்கள் நிர்மாணிக்கப்படுவதுடன் ஏற்கனவே செயற்பட்டு வருபவை புனரமைக்கப்படும்.

## V. மீன்பிடி

1. குடாநாட்டுக் கடலில் தற்பொழுது அமுலில் இருக்கும் மீன் பிடிப்பதற்கான கடல் எல்லை, நேரம் ஆகியவற்றைப் படிப்படியாக விரிவுபடுத்துவதுடன் மீனவர்கள் மீது பிரயோகிக்கப்படும் அர்த்தமற்ற பாதுகாப்பு கெடுபிடிகள் நீக்கப்பட்டு சுமுகமாக தொழில் செய்வதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

2. மீனவர்களுக்குரிய மீன்பிடி உபகரணங்கள் மற்றும் வள்ளங்கள் ஆகியவற்றை கொழும்பில் இருந்து தருவிப்பதில் பிரச்சினைகள் ஏற்படுமாயின் அவை உடனே நீக்கப்படும்.

3. மீனவர்களது கடல் உணவுப் பொருள்கள் யாழ் குடாநாட்டிற்கு வெளியே சந்தைப்படுத்த உரியவசதிகள் அளிக்கப்படும்.

4. மீன்பிடி வள்ளங்கள் மற்றும் உபகரணங்களைப் பெற்றுக் கொள்ள வங்கிக்கடன்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

5. மீனவர் குடும்பங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த தெற்கில் மீனவர்களுக்கென அமுல்படுத்தப்படும் சகல செயற்பாட்டுத் திட்டங்களும் குடாநாட்டிலும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

6. வீட்டு வசதிகள் இல்லாத மீனவ குடும்பங்களுக்கு அவ் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

7. மீன்பிடித்துறையை நவீனமயப்படுத்த பல்கலைக்கழக மட்டத்தில் பாரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அவ் ஆய்வுகள் நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## VI. நிர்வாகம்

1. யுத்தத்தினால் அழிவடைந்து போயுள்ள யாழ் நகரத்தினை நாம் நாடாளுமன்றப் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்பட்டு ஒன்றரை வருடங்களில் புதுப்பொலிவுடன் மீளக் கட்டியெழுப்புவோம்.

2. சாவகச்சேரி, கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுகளில் கொடிகாமம், அச்சுவேலி என இரு புதிய செயலகப் பிரிவுகள் புதிதாக உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

3. காரைநகர் பிரதேசத்திற்கு தனியான பிரதேச செயலகப் பிரிவு அமைக்கப்படும்.

4. யாழ் மாவட்டத்தில் 1981ஆம் ஆண்டு சனத்தொகை அடிப்படையில் 250 குடும்பங்களுக்கு ஒரு கிராமசேவகர் என்னும் அடிப்படையில் கிராமசேவகர் பிரிவுகள் உருவாக்கப்பட்டு புதிய கிராமசேவகர் நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

5. நல்லூர், கோப்பாய், மானிப்பாய், கரவெட்டி பிரதேச சபைகள் நகர சபைகளாக தரமுயர்த்தப்படும்.

6. எமது பிரதேசத்தில் நிலவும் விசேட சூழ்நிலையை கருத்திற்கொண்டு வடக்கு கிழக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்களுடன் விசேட நிதியும் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## VII. வேலைவாய்ப்பு

1. குடாநாட்டில் உள்ள சகல அரச அலுவலகங்களிலும் - உள்ளூராட்சி அலுவலகங்கள் உட்பட - உள்ள சகல வெற்றிடங்களும் நாம் நாடாளுமன்றப் பிரதிநிதிகளாக தெரிவுசெய்யப்பட்டு 6 மாத காலப் பகுதிக்குள் நிரப்பப்படும்.

2. குடாநாட்டில் உள்ள சகல அரச அலுவலகங்களிலும் - உள்ளூராட்சி அலுவலகங்கள் உட்பட - உள்ள சகல அமைய ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

3. மரபுவழிப் பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் கல்வி நிறுவனங்களில் படிப்பை முடித்து பட்டம் பெற்றவர்கள் அவர்கள் பட்டம் பெற்று ஒன்று தொடக்கம் இரண்டு வருடங்களுக்குள் நிரந்தர வேலைவாய்ப்பு வழங்க ஏற்பாடு செய்யப்படும். நிரந்தர வேலைவாய்ப்பு வழங்கப்படும் வரை அவர்களுக்குத் தற்காலிக வேலைவாய்ப்பு வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

4. க.பொ.த சாதாரண, உயர் தரங்களில் சித்தியடைந்தவர்களுக்கு அவர்களது பெறுபேறுகளின் அடிப்படையிலும் சித்தியடைந்த காலங்களின் அடிப்படையிலும் தற்காலிக, நிரந்தர வேலைவாய்ப்பு உரிய மட்டங்களில் வழங்கப்படும்.

5. அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் ஊடாக மறைமுக வேலைவாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும்.

## VIII. பெண்கள், குழந்தைகள்

1. பெண்கள், குழந்தைகள் ஆகியோருக்கான சமூகப் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2. உழைப்பாளிகளை இழந்த குடும்பங்களின் பெண்கள் தலைமையேற்று நடத்தக்கூடிய சுயதொழில் வாய்ப்புத் திட்டம் முன்வைக்கப்படும்.

3. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்கள், சிறுவர்களுக்கு விசேட நலவாழ்வு மையங்கள் அமைக்கப்பட்டு அவற்றின் மூலம் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திட விசேட வேலைத் திட்டங்கள் முன்வைக்கப்படும்.

4. பால் வேறுபாடின்றி பெண்கள் கொண்டிருக்கும் திறமைகளுக்கு உரிய இடம் வழங்கப்படும்.

5. பெண்கள் முகம் கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண விசேட நிர்வாகப் பிரிவுகள் பிரதேச செயலாளர் மட்டத்தில் அமைக்கப்படும்.

6. பெண்கள் கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் விசேட கவனமும் முன்னுரிமையும் அளிக்கப்படும்.

7. குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மாருக்கான போஷாக்கு உணவு சீரான முறையில் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

**வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!**

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000

# ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம்

## IX. சுகாதாரம்

1. யாழ்.போதனா வைத்தியசாலை நவீன வசதிகள் கொண்ட வைத்தியசாலையாக மாற்றி அமைக்கப்படும்.

2. யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு, விபத்துப் பிரிவு தவிர்ந்த ஏனைய பகுதிகள் புறநகர்ப் பகுதியில் சகல வசதிகளுடன் விசாலமான இடப்பரப்பில் வெளிநாட்டு நிதி உதவியுடன் அமைக்கப்படும். சகல இடங்களிலிருந்தும் வைத்தியசாலைக்குப் போக்குவரத்து வசதியளிக்கப்படும்.

3. யாழ். போதனா வைத்தியசாலையில் விபத்துப் பிரிவு, இருதய நோய்ப்பிரிவு, புற்று நோய்ப் பிரிவு என்பன தனியான பிரிவுகளாக சகல வசதிகளுடன் இயங்க ஏற்பாடு செய்யப்படும்.

4. யாழ். போதனா வைத்தியசாலை உட்பட யாழ் குடாநாட்டிலுள்ள சகல வைத்தியசாலைகளிலும் மகப்பேற்று மருத்துவப் பிரிவுக்கு விசேட வசதிகள் அளிக்கப்படும்.

5. சகல வைத்தியசாலைகளிலும் உள்ள வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்பட உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

6. தொகுதிக்கொரு மாவட்ட வைத்தியசாலை தரமுயர்த்தப்பட்டு சேவைகள் விஸ்தரிக்கப்படும்.

## X. இடப்பெயர்வும் மீளக்குடியமர்வும்

1. குடாநாட்டு நிலத்தில் புதையுண்டுள்ள மிதிவெடிகள் மற்றும் வெடிப்பொருள்கள் யாவும் அகற்றப்படுவதுடன் மக்கள் வாழும் பகுதிகளில் மீளவும் இவ் வெடிப்பொருள்கள் புதைக்கப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2. இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் மக்கள் தமது சொந்த இடங்களில் விரைவில் மீளக்குடியமர நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

3.அரசினால் வழங்கப்படும் இடம்பெயர்ந்த மக்களுக்குரிய நிவாரண நிதி பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு நாம் நாடாளுமன்றப் பிரதிநிதிகளாக தெரிவுசெய்யப்பட்டு 3 மாதங்களுக்குள் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

4. யுத்த வன்செயல்களால் உயிரிழப்பு மற்றும் சொத்தழிப்புகளினால் ஏற்பட்ட சேதங்களுக்கு அரசு வழங்கும் நஷ்டஈட்டை விரைவில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5. மீளக்குடியமரும் மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் உலர்உணவு, அவர்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பும் வரை நிறுத்தப்படாது தொடர்ந்தும் வழங்கப்பட உறுதி செய்யப்படும்.

6. ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேல் மாதாந்த ஓய்வூதியம் பெறும் இளைப்பாறிய மீள்குடியேறிய சகலருக்கும் உலர் உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## XI. கைத்தொழில் மற்றும் மூலவளங்களின் பயன்பாடு

1. காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைகள், அச்சுவேலி தொழிற்பேட்டை ஆகியன மீண்டும் விரைவில் இயங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2. பனை, தென்னை வளங்களில் இருந்து அதி உச்ச பயன்களைப் பெற்றுக்கொள்ள விசேட அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

3. மட்பாண்டக் கைத்தொழிலிற்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படும்.

4. யாழ்.குடாநாட்டில் சிறு கைத்தொழில் முயற்சிக்கு விசேட கவனம் செலுத்தப்படும்.

5. பரந்தன் இரசாயன தொழிற்சாலையை மீளமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

6. யாழ்.குடாநாட்டின் பிரதான பொருளாதார நடவடிக்கைகளான விவசாயம், மீன்பிடி ஆகியவற்றை எவ்வித அச்சுறுத்தலின்றி மேற்கொள்வதற்கான சூழலை உருவாக்கல்.

## XII. மின்சாரம்

1. 24மணி நேர மின்சாரத்தினை குடாநாட்டின் சகல பகுதிகளிலும் - சகல வீடுகளுக்கும் சகல நிறுவனங்களுக்கும் - வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

## XIII. போக்குவரத்து

1. குடாநாட்டிற்கும் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்குமான தரைவழிப் பாதை தடங்கலின்றி நடைபெறக்கூடிய சூழ்நிலை தோன்றும்வரை யாழ். - திருமலை கப்பற் சேவையை தினமும் ICRC வழித்துணையுடன் நடாத்த ஒழுங்குசெய்யப்படும்.

2. சகல பஸ் போக்குவரத்துப் பாதைகளினூடாக சேவையில் ஈடுபடுத்தப்படும் அரச பஸ் வண்டிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

3. தனியார் போக்குவரத்துத் துறையினை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கமைய தனியார் பஸ்களை கொள்வனவு செய்வதற்கு கடன் வசதிகளும் கொழும்பிலிருந்து பஸ்களை யாழ் குடாநாட்டிற்கு எடுத்துவருவதற்கான ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

4. குடாநாட்டில் உள்ள சகல வீதிகளும் மீளத் திருத்தி அமைக்கப்படும்.

## XIV. தபால், தொலைத்தொடர்பு

1. எண்பது மில்லியன் ரூபா செலவில் சகல வசதிகளுடன் புதிய யாழ் பிரதம தபாலகக் கட்டத் தொகுதி நிர்மாணிக்கப்படும்.

2. தபால், தொலைத் தொடர்பு சேவைகள் குடாநாட்டில் திறம்பட முன்னெடுக்க அங்குள்ள பதவி வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படும்.

3. தொலைத்தொடர்பு வசதியைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பித்து காத்திருப்பவர்களுக்கு நாம் நாடாளுமன்றப் பிரதிநிதிகளாக தெரிவுசெய்யப்பட்டதும் உடனடியாக புதிய இணைப்புக்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## XV. தொழிலாளர் நலன், கூட்டுறவு

1. சொத்திழப்பிற்கு உள்ளாகியிருக்கும் இடம்பெயர்ந்த கூட்டுறவு அமைப்புக்களுக்கும் யுத்த அனர்த்தங்களினால் இழப்புக்களை சந்தித்த கூட்டுறவு அமைப்புக்களுக்கும் நிவாரணத்திட்டங்கள் முன்வைக்கப்படும்.

2. பருவகால தொழிலிழப்புக்கு உள்ளாகின்ற சகல தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கான வருமானத்தை உறுதிப்படுத்தும் திட்டங்கள் முன்வைக்கப்படுவதுடன் அவர்களது உற்பத்திக்கான உரிய சந்தை வாய்ப்பும் பெற்றுத்தரப்படும்.

3. கூட்டுறவு ஊழியர்கள் சம்பளத் திட்டத்தினை திருப்திகரமான நிலைக்கு உயர்த்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

4 குடாநாட்டிலுள்ள கூட்டுறவாளர்கள், தொழிற்சங்கத்தினர், சிறு கைத்தொழிலில் ஈடுபடுவோர் மற்றும் தொழிலாளர்களது உரிமைகளை மதித்து அவர்களது நியாயமான கோரிக்கைகளை - அதாவது சம்பள உயர்வு, ஓய்வூதியம் மற்றும் பிற விடயங்களை -நிறைவேற்ற உடன் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## XVI. மக்கள் நலன்

1. யுத்தத்தினால் கைவிடப்பட்ட முதியோர்களை விசேடமாகப் பராமரிக்க புதிய, சகல வசதிகளுடன் கூடிய முதியோர் இல்லங்கள் அமைக்கப்படுவதுடன் தற்பொழுது பாவனையிலுள்ள முதியோர் இல்லங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு சகல வசதிகளும் அளிக்கப்படும்.

2. யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அங்கவீனமானவர்களுக்கு விசேட சலுகை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டு அவர்களது வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட விசேட வேலைத் திட்டங்கள் முன்வைக்கப்படும்.

3. யாழ் மாவட்டத்திலுள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பாரியளவிலான குடிநீர் விநியோகத் திட்டம் வெளிநாட்டு நிதி உதவியுடன் எமது பதவிக் காலத்தில் செயற்படுத்தப்படும்.

4. யுத்தத்தினால் மனநலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சை அளிக்க உரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதுடன் மனநலக் காப்பகங்கள் அவர்களுக்கென அமைக்கப்படும்.

## XVII. பண்பாட்டு வளர்ச்சி

1. நல்லூர் கந்தசுவாமி கோவில், கீரிமலை நகுலேஸ்வரர் கோவில், யாழ்.புனித மரியன்னை பேராலயம் (பெரிய கோயில்) ஆகிய ஆலயங்களின் சுற்றாடல் புனிதப் பிரதேசமாக பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

2. சகல மதங்களுக்குமுரிய வழிபாட்டுத் தலங்களின் புனிதத் தன்மையும் அவற்றிற்குரிய சுதந்திரமும் பேணிப் பாதுகாக்கப்படும்.

3. எமது பிரதேசத்தில் கலை, இலக்கிய மற்றும் பண்பாட்டு வளர்ச்சிக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் ஊக்கமும் அளிக்கப்படும்.

## XVIII. பொதுவானவை

1. குடாநாட்டிற்குரிய உணவு மற்றும் சகல பாவனைப் பொருள்களும் கொழும்பில் இருந்து வடபகுதிக்கு எவ்வித தங்குதடையுமின்றி தேவையான அளவு வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும். இதனால் வடபகுதியில் பொருள்கள் தட்டுப்பாடு, கள்ளச் சந்தை, விலையேற்றம் என்பன தடுக்கப்படும்.

2. கொழும்பில் இருந்து வடபகுதிக்கு பொருள்களை கொண்டுவரும் வர்த்தகர்களுக்கு தங்களது பொருள்கள் சேதத்திற்கோ அல்லது அழிவிற்கோ உள்ளாகுமாயின் அரசினால் நஷ்டஈடு வழங்க உறுதிசெய்யப்படும்.

3. வர்த்தகர்கள் தங்கள் வியாபார நடவடிக்கைகளை விஸ்தரித்துக் கொள்வதற்காக விசேட வங்கிக்கடன் வசதிகளுக்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.

4. நகை வர்த்தகர்களுக்கு வங்கிகள் மூலம் தங்கம் வழங்க ஏற்பாடு செய்துதரப்படும்.

5. மத்திய, மாகாண அரசுகளின் கீழ் பணிபுரியும் அரச ஊழியர்கள் தங்களது சேவைகள் குறித்து எதிர்நோக்கும் பிரச்சினைகள் யாவும் நாம் நாடாளுமன்றப் பிரதிநிதிகளாக தெரிவுசெய்யப்பட்டு 6 மாத காலத்துக்குள் தீர்த்துவைக்கப்படும் என உறுதி செய்கின்றோம்.

6. குறிப்பிட்ட வருடங்களுக்கு மேல் அரச நிறுவனங்களில் தற்காலிகமாக பணியாற்றுபவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

7. சுமுகநிலை தோன்றும்வரை சகல அரச நிறுவனங்களிலும் பணியாற்றுபவர்களுக்கு ஆபத்துப்படி தொடர்ந்து வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

**குறிப்பு:- இத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரசியல், சட்டம், ஒழுங்கு விடயம் *"ஈழமாநிலத்திற்கு"* பொதுவானதாகவும், ஏனைய விடயங்கள் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்திற்குரியதாகவும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஏனைய மாவட்டங்களுக்குரிய அரசியல், சட்டம், ஒழுங்கு தவிர்ந்த ஏனைய விடயங்கள் பிரத்தியேகமாக அந்தந்த மாவட்டங்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.**



# தேசத்திற்காக தியாகங்களை ஏற்போம்!

(C/3120)

# என்றும் நாம் மக்களின் நண்பர்கள்

## வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!

## யாழ். மாவட்ட
## தனியார் பாரஊர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்
(வ-து)

### நலன்புரிச் சங்கப் பொதுக்கூட்டம்

காலம்:- **04-10-2000** புதன்கிழமை
நேரம்:- காலை 10.00 மணி
இடம்:- சங்கப் பணிமனை

**மேற்படி கூட்டம் சங்கத் தலைவர் திரு.வீ.குமாரசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும்.**

I மேற்படி நலன்புரிச் சங்கத்திற்குரிய யாப்பு வெளியிடுதலும், அதற்குரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படுதலும்.
II மேற்படி நலன்புரிச் சங்கத்திற்கான நிர்வாக சபையைத் தெரிவுசெய்தலும்.

நலன்புரியில் அங்கத்தவர்களாகச் சேர்ந்த சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**இ. அரிகரன்**
**செயலாளர்**

(78859)

## கிராம அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,செப்.30

சங்கரத்தை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் சங்கரத்தை, துணைவி கிராமங்களின் அபிவிருத்தி சம்பந்தமான கருத்தரங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் நா.ஜெயரஞ்சிதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் ஈ.பி.டி.பி அமைப்பின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளரும் வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தலைவருமாகிய ந.திரிலோகநாதன், ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவதாசன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்.

இந்தக் கிராமங்களின் அபிவிருத்தி தொடர்பாக முன்வைக்கப்பட்ட சகல திட்டங்களும் மிக விரைவில் செயற்படுத்தப்படும் என ந.திரிலோகநாதனும் வழுக்கையாறு மயானமடத்தின் திருத்தவேலைகளுக்கு 25ஆயிரம்ரூபா ஒதுக்குவதாக எஸ்.சிவதாசனும் கூறினர். (க-ரி)

## மட்டுவிலில் இரு புலிகள் உயிரிழப்பு

வவுனியா செப்.30

மட்டுவில் பகுதியில் கடந்த27 ஆம் திகதி படையினருடன் இடம்பெற்ற எதிர்பாராத மோதலின்போது தமது தரப்பில் தேவன்(சிவராஜா ரஜனி-கிளிநொச்சி), எழில்மாறன் (தம்பிப்பிள்ளை ஜெயக்குமார்- மட்டக்களப்பு) ஆகியோர் உயிரிழந்ததாக விடுதலைப்புலிகள் நேற்றுக் காலை தமது 'புலிகளின் குரல்' வானொலியில் தெரிவித்தனர்.(ஜ-8)

## கண்ணீர் அஞ்சலி

**யாழ். பல்கலைக்கழக விவசாயபீட 11 ஆம் அணி மாணவன்**
**துஷ்யந்தன் அவர்களின்**
**தந்தையார்**
### நாகலிங்கம் துரைராஜா

அவர்களின் திடீர் மறைவையிட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

*விவசாய பீட மாணவர் ஒன்றியம்,*
**விவசாய பீடம், யாழ். பல்கலைக்கழகம்.**

(78858)

## 20 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
### இ. நமசிவாயதேசிகர் அவர்கள்

**தமிழ்த்தாய் பெற்றெடுத்த இலக்கண வித்தகரே!**
**அறிவிக்கும் ஆற்றலுக்கும் நுண்ணறிவாளனே!**
**பார்போற்றும் பேராசானே தேசிகரே - நீர்**
**கட்டுவனில் பிறந்து தமிழகத்தில் மறைந்ததும் ஏனோ?**

இவரது ஆத்மா இறைபதம் கலந்து இன்புற்றிருக்க சர்வ வல்லமை பொருந்திய ஈசுர விநாயகனின் பாதம் பணிகின்றேன்.

சோழியூரான் - பிறைசூடிக்குரு

*ஈசுர விநாயகர் தேவஸ்தானம்,*
*பறாளாய்,*
*சுழிபுரம்.*

(78850)

## அகில இலங்கை அரச சேவை
## சித்த ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்கம்
## யாழ்ப்பாணம்

## நூல் வெளியீட்டு விழா

### சித்த மருந்து முறையியல்
### SIDDHA PHARMACOPOEIA

ஆசிரியர்:
Dr. பொன். இராமநாதன்

இடம்: **நாவலர் கலாசார மண்டபம்**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**
காலம்: **01-10-2000** ஞாயிற்றுக்கிழமை
காலை 10.00 மணி

*சித்த மருந்து முறையியல் நூல் வெளியீட்டு விழா*

**நிகழ்ச்சி நிரல்**

மங்கள விளக்கேற்றல்
இறை வணக்கம்

தலைமையுரை: Dr. R. **கனகலிங்கம்**
வரவேற்புரை: Dr. V. **வேதநாதன்**
*பிரதம சித்த வைத்திய அதிகாரி, யாழ். மாநகரசபை.*
ஆசியுரை: **பேராசிரியர் P. கோபாலகிருஷ்ணஐயர்**
*தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.*
பிரதம விருந்தினர் உரை:
**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
*துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்.*
சிறப்பு விருந்தினர்கள் உரை:
**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**
*பீடாதிபதி, உயர்பட்ட ஆய்வுபீடம், யாழ். பல்கலைக்கழகம்.*
**திரு. வே. பொ. பாலசிங்கம்**
*ஆணையாளர், யாழ். மாநகரசபை.*
Dr. **(திருமதி) G. பவானி**
*தலைவர், சித்த மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.*
**திரு. T. V. கிருஷ்ணசாமி**
*உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்.*
வெளியீட்டுரை:
Dr. R. **கனகலிங்கம்**
*தலைவர், அகில இலங்கை அரசசேவை*
*சித்த ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்கம், யாழ்ப்பாணம்.*
முதற் பிரதி வழங்கல்:
**பேராசிரியர் சு. பவானி**
*சித்த மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.*
சிறப்புப் பிரதிகள் வழங்கல்
முதற் பிரதி பெறுபவர் உரை:
சிறப்புப் பிரதி பெறுபவர் உரை:
Dr. P. **உரோமகேஸ்வரன்**
*முன்னாள் சுதேச மருத்துவப் பணிப்பாளர்,*
*வடக்கு - கிழக்கு மாகாண சபை.*
ஆய்வுரை: **Dr. T. சபாநாதன்**
பதிலுரை: **Dr. பொன். இராமநாதன்** *நூல் ஆசிரியர்.*
நன்றியுரை: **Dr. I. ஜெபநாமகணேசன்** *செயலாளர்.*
சிறப்புப் பிரதி பெறுவோர்:
Dr. **(திருமதி) K. பரமசிவம்**
*அதிபர், லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி, யாழ்ப்பாணம்.*
Dr. **(திருமதி) M. ஸ்ரீகாந்தன்**
*சித்த மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.*
Dr. **(திருமதி) T. ஜெயசங்கர்**
*வைத்தியப் பொறுப்பதிகாரி, சித்த போதனா வைத்தியசாலை, கைதடி.*
Dr. V. **வேதநாதன்** *யாழ். மாநகரசபை.*
Dr. **பொன். சண்முகரத்தினம்**
*வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை, நீர்வேலி.*
Dr.T. **சண்முகராஜா** *வேலணை பிரதேச சபை.*
Dr.I. **ஜெபநாமகணேசன்** *யாழ். மாநகரசபை.*
Dr.K. **சிவராஜா** *வலி.தெற்கு பிரதேச சபை.*

**நூலின் விலை: ரூபா 250/-**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*- செயலாளர்.*

(78821)


# வேண்டாம்
# வன்முறை

தேர்தல் வன்முறையைக் கண்காணிப்பதற்கான நிலையம் (தே.வ.க.நி)

ஜனநாயகத்தை காக்க வன்முறைக்கெதிராக வாக்களியுங்கள்

# மக்களை மிருகங்கள் எனக் கூறிய ஜனாதிபதி மன்னிப்பு கோரவேண்டும்

## ரணில் கோரிக்கை

கொழும்பு, செப். 30

பொது மக்கள் ஐக்கிய முன்னணி மீண்டும் இந் நாட்டு மக்களை ஏமாற்ற முயற்சிக்கின்றது. கடந்த சில தினங்களுக்கு முன் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உரையாற்றும் போது நாட்டு மக்களை இரண்டுகால் மிருகங்கள் என்று கூறியுள்ளார். இதனை அவர் பகிரங்கமாக வாபஸ் பெறவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பதுளையில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டு மக்களின் பணத்தில் வாழுகின்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மக்களையே திட்டித் தீர்க்கும் அளவுக்கு மாறியுள்ளார் இதற்காக அவர் மக்களின் முன்னால் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்க வேண்டும். தனது நாட்டைச் சேர்ந்த மக்களையே கேவலமாகப்பேசும் ஜனாதிபதியைப் போன்ற தலைவர்களை வேறு எந்த ஜனநாயக நாட்டிலும் காணமுடியாது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிப்போர் தமது சொந்த நலன்களையே பேணுவதில் அக்கறை கொண்டுள்ளனரே தவிர நாட்டு மக்களின் நலன் பற்றிச் சிறிதும் அக்கறை கொள்ளவில்லை.

இந்நாட்டு மக்களின் துன்பங்களை பொது மக்கள் ஐக்கிய முன்னணி உணர்ந்து கொள்ளவில்லை கடந்த ஆறு வருடங்களாக விவசாய மக்களை ஏமாற்றிய அக்கட்சி தேர்தல் வெற்றிக்காக மீண்டும் அவர்களை ஏமாற்ற நினைத்து பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசி வருகின்றது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி தேர்தலில் வெற்றி பெற்றதன் பின்னர் உடனடியாக வெளிநாட்டில் இருந்து உருளைக் கிழங்கு இறக்குமதி செய்யப்படுவதைத் தடைசெய்வோம். இதன் மூலம் விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவோம்—என்றார்.

(ஐ-4)

## காலம் பிந்திக் கிடைத்த விண்ணப்பங்கள் நிராகரிப்பு

தென்மராட்சி, செப். 30

குடாநாட்டில் தபால்மூல வாக்களிப்புக்கான விண்ணப்ப முடிவு திகதிக்குப் பின்னர் விண்ணப்பித்தோரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப் பட்டுள்ளன என்று உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் சம்பந்தப்பட்டவர்களுக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

மேற்படி கடிதத்தின் பிரதி அத்தாட்சிப்படுத்தும் அலுவலருக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

(இ-7-117)

## கூட்டுறவு அபிவிருத்தி அலுவலராக பதவி உயர்வு பெற்ற 9 பேருக்கும் வடக்கு-கிழக்கில் நியமனம்

அரியாலை, செப். 30

யாழ். மாவட்டக் கூட்டுறவுத் திணைக்களத்தில் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகப் பதவி உயர்த்தப் பட்ட ஒன்பது பேருக்கும் விரைவில் வடக்கு—கிழக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகங்களில் கடமைகள் வழங்கப் படவுள்ளன.

கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பதவி உயர்வு நியமனங்களைச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சை அண்மையில் யாழ். மாவட்டத்தில் இடம்பெற்றது.

இந்தப் பரீட்சையில் பின்வருவோர் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக வடக்கு — கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

திருமதி யோ. செல்வரத்தினம், த. கந்தசாமி, சி கந்தசாமி, பொ. சிவலிங்கம் எ. சின்னத்தம்பி, சி. ஐயாத்துரை, சோ. குமாரவேலு. செல்வி இ. இராஜலட்சுமி, திருமதி இ. கதிரவேலு.

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களங்களில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவியதோடு இந்தப் பணிக்கு 18 பேரின் வெற்றிடம் நிரப்பப்படாமல் இருந்து வந்ததாகத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-17)

## மாதர்சங்க உறுப்பினர்களுக்கு ஐ. நா. உதவியில் கடன் திட்டம்

கோப்பாய், செப். 30

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் கோப்பாய் மத்தி மாதர்சங்க உறுப்பினர்களுக்கு; மூன்றாம் கட்ட சுழற்சிமுறை விவசாயக் கடனாக இரண்டு லட்சத்து இருபத்தையாயிரம் ரூபா பகிர்ந்தளிக்கப்படவுள்ளது

தேர்ந்தெடுக்கப்பட்ட 45 மாதர் சங்க உறுப்பினர்களுக்கு 5 ஆயிரம் ரூபா பணமாக எதிர்வரும் 3 ஆம் திகதி சங்க அலுவலகத்தில் வைத்து கோப்பாய் பிரதேச செயலரால் வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே முதலாம் கட்டமாக 50 பயனாளிகளுக்கு 10 ஆயிரம் ரூபா வீதமும் —

இரண்டாம் கட்டமாக 15 பயனாளிகளுக்கு 10 ஆயிரம் ரூபா வீதமும் — வழங்கப் பட்ட கடனை தவணை அடிப்படையில் அவர்கள் மீளளித்துவருகின்றனர். (ஐ-72)

## தொழில்நுட்பஅறிவைபயன்படுத்தி தேவைகளை நிறைவு செய்வோம்

### தொழிற்சாலை திறப்பு விழாவில் உரை

காரைநகர், செப். 30

எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு மக்கள் கைத்தொழில் துறையில் ஈடுபாடு காட்ட வேண்டும். அத்துடன் எமக்குத் தேவையான உதிரிப் பாகங்களையும் உபகரணங்களையும் தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்தி நாமே உற்பத்தி செய்யும் அளவிற்கு வளர வேண்டும்.

இவ்வாறு வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் வட்டுக்கோட்டை சிவன்கோயில் பொதுச் சந்தைக்கு அருகில் 'மயன்ஸ்' தொழிற்சாலையை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் தெரிவித்தார்.

பண்டிதர் க. மயில்வாகனம் தலைமையில் நடைபெற்ற விழாவில் திரிலோகநாதன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

வலி. மேற்குப் பிரதேச சபைப் பிரிவில் சூறாவளி வேகத்தில் அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இடையில் தேர்தல் வந்தாலும் எந்த அபிவிருத்தி வேலைகளும் தடைப்படப் போவதில்லை.

கடந்த காலங்களில் எந்த அரசியல்வாதிகளும் செய்யாத அளவிற்கு தமிழ்ப் பிரதேசங்களில் அபிவிருத்தித் திட்டங்களை நாம் மேற்கொண்டு வருகிறோம்— என்று குறிப்பிட்டார்.

விழாவிற்கு வருகை தந்தோருக்கு மயன்ஸ் நிறுவனம் சார்பில் பண்டிதர் ம. ந. கடம்பேசுவரன் நன்றி தெரிவித்து உரைநிகழ்த்தினார்.

(ஐ-73)

## கலைவிழா

வடமராட்சி, செப். 30

துன்னாலை வசந்தம் பாலர் பாடசாலை கலைவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு திருமதி ப. வல்லிபுரம் தலைமையில் நடைபெறும்.

கரவெட்டி, வடமராட்சி தெற்கு. மேற்கு பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன் இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ஐ-173)

## நூல் வெளியீடு

நெல்லியடி, செப் 30

தெணியான் ஆசிரியரின் 'காத்திருப்பு' நாவல் அறிமுக விழாவும். ஓவியர் ரமணியின் கௌரவிப்பு விழாவும் நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறைத் தலைவர் பேராசிரியர் நா. ஞானகுமாரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், தேவரையாளி இந்துக் கல்லூரி அதிபர் ம. குட்டித்தம்பி வாழ்த்துரையையும், வல்வெட்டித்துறை நகரசபை பிரதம எழுதுநர் வே. சிவராசலிங்கம் வரவேற்புரையையும் வழங்குவர்.

கொட்டடி நமசிவாய வித்தியாலய உப அதிபர் மு. அநாதரட்சகன் அறிமுகவுரை நிகழ்த்துவார். வர்த்தகர் கு.செல்வநாயகம் முதற் பிரதியைப் பெறுவார்.

(ஐ-109)

## வாசகர் திருமுகம்

### தேர்தல் ஆணையரின் முடிவை கட்சிகள் ஆதரிக்காதது ஏன்?

வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தல் சம்பந்தமாக அதிமுக்கியமான 4 விடயங்களை இங்கே குறிப்பிடுவதற்கு விழைகின்றேன்.

(1) 'ஸ்ரிக்கர்' விவகாரம் பூதாகாரமாக மாறிவருவது கவலைக்குரியது. 'ஸ்ரிக்கர்' விடயத்தில் தேர்தல் ஆணையாளர் கடைப்பிடிக்கும் நிலைப்பாட்டை யாவரும் ஆதரிக்க வேண்டும். முக்கியமாகத் தேர்தல் களத்தில் இறங்கியுள்ள எல்லாக் கட்சிகளும் தங்களது முழு ஒத்துழைப்பையும் ஆணையாளருக்குத் தெரிவிக்க வேண்டும். இந்தியாவில் முன்னாள் தேர்தல் ஆணையாளருக்கிருந்த சுதந்திரம் இங்கே இல்லாவிடினும் ஆணையாளர் எடுத்தமுடிவு போலிவாக்கு அளிப்பதைத் தடுப்பதற்காக என்பதனைச் சகலரும் உணர வேண்டும். எனவே ஜனநாயக வழியைப் பின்பற்றி அவர் எடுத்த நடவடிக்கை போற்றுதற்குரியது. அவருக்குத் தோன்றியுள்ள எதிர்ப்பை உற்று நோக்குமிடத்து ஒரு பூரணசுதந்திர தேர்தல் ஆணையாளரின் முக்கியத்துவம் புலப்படுகின்றது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்க்கட்சிகள் வெளிப்படையாக இது வரை தேர்தல் ஆணையாளரின் முடிவை ஆதரிப்பதாகச் செய்திகள் இல்லை.

(2) இத்தேர்தலில் வாக்களிப்பு நடைபெறும் பொழுது ஒவ்வொரு வாக்காளரும் தனது அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டுமென்ற நிபந்தனை இருக்க வேண்டும். இதுவும் போலிவாக்கு அளிப்பதைத் தடுப்பதற்கு வழிவகுக்கும். சகல கட்சிகளும் இதனை வற்புறுத்துவது அவர்களின் கடமை.

(3) ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் 'Polling Agents' பிரசன்னமாக இருப்பது இன்றியமையாத ஒன்று. தத்தமது கட்சிகளின் நலனைக் கவனித்து ஆள்மாறாட்டத்தைத் தவிர்ப்பதற்கு உறுதுணையாக இருக்கவேண்டியது அவர்களின் கடமை. மிக அண்மைக் காலத் தேர்தல்களில் இந்நடைமுறையைப் பின்பற்றுவதில் சில பிரச்சினை தோன்றுவதற்கு வன்செயலும் பயமுறுத்தலும் காரணமாக இருந்தன.

(4) அடுத்து யுத்த சூழ்நிலையில் ஒரு நேர்மையான தேர்தல் நடைபெறுவது கடினமானதொன்று அத்தோடு வாக்காளர்களின் பாதுகாப்பு ஒரு பாரிய பிரச்சினையாகும். இது தொடர்பாக ஜனநாயக இடதுசாரி முன்னணியின் முன்மாதிரி நடவடிக்கை பாராட்டுக்குரியது.

அச்சுவேலி. சி. இரத்தினசுவாமி

### அதிகரிப்பு நியாயமானதா?

(பாண் விலை அதிகரிப்பு ஏன்? என்ற தலைப்பில் 19-09-2000 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பேக்கரி ஒன்றின் உரிமையாளர் வ. அஞ்சலோ எழுதிய வாசகர் திருமுகத்துக்குப் பதில் அளிக்கும் வகையில் பல்வேறு திருமுகங்கள் கிடைத்தன. அவற்றுள் இரண்டைத் தெரிவு செய்து ஒன்றை நேற்றுப் பிரசுரித்தோம். அடுத்த கடிதம் இன்று பிரசுரமாகிறது.)

பாணின் தற்போதைய விலை (350 கிராம்) ரூபா 7.50 சதம் ஆனால் பேக்கரி உரிமையாளரான வ. அஞ்சலோ பாணின் விலை (350 கிராம்) ரூபா 8.00 எனக் கொண்டு ஒரு கணக்குப் போட்டுக் காட்டியுள்ளார்.

இது இங்கு உள்ளவர்கள் எல்லோரும் கணக்குத் தெரியாதவர்களும் கடைப்பக்கம் போகாதவர்களும் என்ற நினைப்பையே உண்டு பண்ணியுள்ளது. 400 கிராம் புளித்த மா (350 கிராம் பாண்) ரூபா 7.50 சதம் எனின் 510 கிராம் புளித்த மா

$$\text{ரூபா } \frac{7.50 \text{ சதம்}}{400 \text{ கிராம்}} \times 510 = 9.56$$

அல்லது பாணாக

$$\text{ரூபா } \frac{7.50 \text{ சதம்}}{350 \text{ கிராம்}} \times 450 = 9\ 64$$

ஆனால் பேக்கரி உரிமையாளரான வ. அஞ்சலோ புளித்தமாவுக்கு 64 சதமும், பாணுக்கு 64 சதமும் கூடக் காட்டி (புளித்த மா) ரூபா 10 20 சதம் எனவும் (பாண்) ரூபா 10. 28 சதம் எனவும் கணக்குக் காட்டியுள்ளார். ஆக இரண்டு விதமாகப் பார்ப்பினும் 64 சதம் மட்டும் கூட்டிக் காட்டியுள்ளமை தெளிவு.

ஒரு பொருளை உற்பத்தி செய்யும் போதும் மேற் கூறிய விலை பொருந்தவில்லை. ஆனால் பேக்கரி உரிமையாளர்களோ விசேட பாண், இனிப்புப்பாண் மற்றும் இனிப்புப்பணிஸ் என உற்பத்தி செய்து தாம் நினைத்த விலையில் விற்பனை செய்கிறார்கள். அது மட்டுமா? பிஸ்கட் மற்றும் றஸ்க். மடத்தல் எனப் பல.

எனவே விலை அதிகரிப்புச் செய்யும் போது மேற்படி உப உற்பத்தி கணக்கில் எடுக்கப்படவில்லை.

முன்பு இங்கு இருந்த பொருள்களின் விலையுடன் (சீனி, தாவர எண்ணெய், மா) இப்போது உள்ள விலையை ஒப்பு நோக்கும் போது ஏறக்குறைய ½ மடங்கு குறைவாக உள்ளமை கண்கூடு.

எனவே மேற்கூறியவற்றைக் கருத்திற் கொண்டு பார்த்தால் பாணின் புதிய விலை அதாவது 450 கிராம் பாண் ரூபா 9. 00 இந்த கடைகள் மூலம் விற்பனை செய்யலாம் என்பது நீதியானதாக இருக்கும் இவற்றைச் செய்வார்களா?

க. சாம்பசிவன்

யாழ்ப்பாணம்.

# இந்த வார இராசி பலன்

## 30-09-2000 இலிருந்து 06-10-2000 வரை

| | | | |
|---|---|---|---|
| | | வியா சனி | ரா |
| | இராசிச்சக்கரம் | | |
| | | | செவ் |
| கே | | புத, சந், வெ | சூ |

*மாற்றம்:- 30-09-2000இல் சுவாதி - துலாம் இராசியில் சந்திரன் நிற்கும்.*

*யுத்தத்தாலும், தேர்தலாலும் குழப்பநிலையை மக்கள் அடைந்து வெறுப்படைவார்கள். கலக்கமா? கலகமா? எனத் தெரியாத நிலை தோன்ற இடம் உண்டு. புதிய உத்திகளை, தந்திரங்களை அரசியலிலும், யுத்தங்களிலும் அனைவரும் கையாள இடமுண்டு. ஆயினும் அரசுக்கு ஆதரவு பெருகி வரும். இந்தியா தன் சுய ஆதிக்கத்தை அயல் நாடுகளில் அழுத்திக் காட்டும். மேற்குலகின் வலுவான உதவிக்கரங்கள் கிடைக்கும். மத்திய கிழக்கில் பதற்றநிலை தோன்றும். அணு ஆயுத வலுவை உறுதிப்படுத்துவதனால் புதிய பிரச்சினைகளை மேற்கு நாடுகள் எடுக்கும் ஒரு நிர்ப்பந்த நிலை உருவாகும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.*

### மேடம்

உச்சியிலிருந்து பள்ளத்துக்கு வெள்ளம் ஓடுவது போல ஓடி ஓடிச் சிலரைப் பற்றிச் சொல்லுபவர்கள் நிச்சயம் ஒருநாள் பள்ளத்தில் தான் விழ வேண்டிவரும். எனவே நிதானமாகச் செயற்படுங்கள். தொழில் ஸ்தானத்தில் வாக்குக் கலகங்கள் ஏற்படும். ஆயினும் வருமானப் பெருக்கம் ஏற்பட இடமுண்டு. அரசியல்வாதிகளின் உதவிகள் கிடைக்கும். சகோதர வழியிலிருந்து உதவிகள் கிடைக்கும். திட்டமிட்ட சிலரின் தவறான வழிகாட்டலால் உங்களுக்கு அபகீர்த்தி ஏற்பட்டு மனப் பயம் ஏற்பட இடம் உண்டு. மனப் பதற்றம், காய்ச்சல், வயிற்றுநோ என்பன ஏற்பட இடமுண்டு. வியாபாரத் துறை, மருந்துத்துறை, பாதுகாப்புத் துறை, எண்ணெய்த்துறை, செய்தித் துறை போன்ற துறைகளில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு நல்ல வருவாய்கள் வரும்.

*அதிர்ஷ்ட நாள்:-வெள்ளி.*

### இடபம்

இளைய பிள்ளையின் பலன் மட்டும் குடும்பத்தில் தாய், தந்தை, சகோதரங்களுக்கு நடக்கும் என்று மக்கள் நம்பக்கூடாது. அவரவர் பலன்கள் அவரவர்களுக்கு நடக்கும் என்பதே உண்மையாகும். கூட்டு வாழ்க்கையில் கூட்டுப்பலன்களின் தாக்கத்தின் ஒரு பங்கு தனிப்பட்ட வரை சிலசமயம் தாக்க இடம் உண்டு. எனவே கூடி வாழ்பவர்களை அனுசரித்து உங்கள் திட்டங்களை, தொழில் ஸ்தானத்தில் நடைமுறைப்படுத்தி வரவும். அதனால் பலவிதமாற்றங்கள் ஏற்படும். குடும்பத்தில் குதூகலமும், இடாம்பீகச் செலவுகளும் அதிகரிக்கும். இடமாற்றங்கள் நல்லதல்ல. பொருளால் வேதனை வரும். தந்தை வழியினருக்கு நல்லதல்ல. நெஞ்சுவலி, முதுகுநோ, நாரிப்பிடிப்பு, விறைப்பு, சளி கொடுக்கலாம். குருத்துறை, போக்குவரத்துத்துறை, செய்தித் துறை, ஹோட்டல் போன்ற துறையைச் சேர்ந்தவர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.*

## சோதிட சஞ்சீவி

### மிதுனம்

சோதிடர்கள் ஏன் மாறுபட்ட கருத்துக்களை திருமணப் பொருத்தங்களில் கொடுக்கின்றார்கள்? இது மக்களின் கேள்வியாகும். சோதிடர்களுக்குள்ள அறிவுத்திறன், அனுபவத்திறனில் வித்தியாசம் இருப்பதே இதற்கு உண்மையான காரணமாகும். உங்கள் தொழில் ஸ்தானத்தில் உங்கள் புத்தி நுட்பத்தால் பலவழியில் இலாபங்கள் அதிகரிக்கும். எதிர்ப்பாளர்கள் உதவி செய்வார்கள். பொருள் செலவுகள் அதிகரிக்கும். பித்த ரோகங்கள், வாய்வுத் தொல்லைகள் என்பன கொடுக்கும். எண்ணெய்த்துறை, அரசியல் துறை, வியாபாரத்துறை, நிர்வாகத் துறை போன்ற துறையினர்களுக்கு அதிக இலாபங்கள் அதிகரிக்கும். தூரதேசச் செய்திகளால் மகிழ்ச்சிகள் ஏற்பட இடம் உண்டு.

*அதிர்ஷ்ட நாள்:- திங்கள் (மத்தியானம்),புதன் (மத்தியானம்)*

### கடகம்

ஒருவருடைய அனுபவங்களுக்கு நாம் மதிப்புக் கொடுக்க வேண்டும். தொழில் ஸ்தானத்தில் உங்கள் அனுபவச் செறிவான செயற்பாடுகளைக் கண்டு எல்லோரும் திகைக்க இடம் உண்டு. அரசியலில் உங்கள் செல்வாக்கு மேலிடும். நாலு பேர் உங்களைப் பார்த்துத் தலையாட்டுவார்கள். சகோதரங்கள் உதவிகள் செய்வார்கள். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். உங்களை அழகுபடுத்துவதில் அதிக நேரத்தைச் செலவு செய்வீர்கள். வாகன சுகம் கொடுக்கும். தந்தை வழியினருடன் கருத்து வேற்றுமை வரும். அரச உதவிகள் கிடைக்கும். நரம்புச் சோர்வு, வாய்வுப் பொருமல், விறைப்பு, கைகால் உளைவு, சல வருத்தம் என்பன கொடுக்கும். குருத்துறை, எண்ணெய்த்துறை, பாதுகாப்புத்துறை, கமிஷன்துறை, அரசியல்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் நல்ல ஆதாயம் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி.*

### சிங்கம்

தெய்வசக்தி உள்ளவர்கள் உண்மைக்காகப் போராடுவார்கள். பாடுபட்டவர் பலன் அடைய வேண்டும். உலகில் அனேகர் முகத்திற்காக நீதியை விற்று மனச்சாட்சியை உருக்குலைப்பவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் நீங்கள் மட்டும் தர்மம் நிலைநாட்ட எப்பொருளையும் தியாகம் செய்துவிடுவீர்கள். உங்களை எதிர்த்து எவர்தான் போராட முடியும்? தொழில் ஸ்தானத்தில் உறுதியான செயற்பாடுகளை செய்வீர்கள். அரச அதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். எதிர்ப்பாளருடன் நிதானமாக இருக்கவும். திடீர் செலவுகள் அதிகரிக்கும். அடிக்கடி பதற்றம், களைப்பு, வாய்வுத் தொல்லை, உஷ்ணபீடை, பித்த ரோகங்கள் என்பன வரலாம். வியாபாரத்துறை, சட்டத்துறை, ஆசிரியத் துறை, நிர்வாகத்துறை, விவசாயத் துறை போன்ற துறை தொடர்பானவர்கள் அதிக இலாபம் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி.*

### கன்னி

நாம் எவ்வளவு தூரம் பிறருக்கு மதிப்புக் கொடுக்கின்றோமோ அதே அளவுதான் பிறர் எம்மைக் கௌரவிப்பார்கள். இந்நிலையை உங்கள் தொழில் ஸ்தானத்தில் உணர இடம் உண்டு. சகோதரங்கள் அல்லது உறவினர்களுடன் வாக்குக் கலகங்கள் ஏற்பட இடம் உண்டு. அரசியல்வாதிகள் அல்லது அரச அதிகாரிகளின் உதவிகள் கிடைக்க இடம் உண்டு. வாய்வுத் தொல்லை, களைப்பு, நாரிப்பிடிப்பு, பிறப்பு உறுப்புகளில் வருத்தங்கள் என்பன வரலாம். விவசாயத்துறை, பத்திரிகை, தகவல்துறை, அச்சுப் பிரதிகள் வேலைகள், குருத்துறை, வருமானவரித்துறை சம்பந்தமான வேலைகளால் வருமானச் சிறப்பும் மாற்றங்களும் ஏற்பட இடம் உண்டு.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, வெள்ளி.*

### துலாம்

பழி தீர்க்கும் சிந்தனை பாவத்தைப் பெருக்கும். அதனால் நல்லவர்கள், அப்பாவிகள் பாதிக்கப்படும் போது அது மறுதலிக்கும் என்பதை எவரும் மறுக்க முடியாது. உங்களுக்கு அந்த அனுபவங்கள் வரும். நீங்கள் தொழில் ஸ்தானத்தில் அமைதியாக இருக்க வேண்டும். ஓய்வில்லாமல் செயற்பட்டு உங்கள் முயற்சியால் உயர்ந்து கொண்டிருக்கும் நீங்கள் எதற்காக, யாருக்காக பயப்படவேண்டும்? அரசியலில் கலக்காதீர்கள். பட்டும்படாமல் நடந்து வாருங்கள். புதிய வருவாய்கள் வரும். சளி, இரத்தம், தோல் சம்பந்தமான வருத்தங்கள் இருக்கும். வியாபாரத்துறை, மின்சாரத்துறை, நீதித்துறை, குருத்துறை, கோவில்துறையுடன் சம்பந்தப்பட்டவர்கள் ஓடி ஓடித் திரிந்து காரியங்களை ஆற்றுவதனால் அதிக இலாப வரவைப் பெறுவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி,வெள்ளி.*

### விருச்சிகம்

திறமையானவர்கள், அனுபவசாலிகள் ஒரு தவறு விட்டுவிட்டால், அதனால் அவர்களை நாம் குறைவாக எண்ணி விட முடியாது. எதிர்ப்பாளரால் ஆதரவு பெருகும். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள் ஆதரவு தருவார்கள். வீடு, வாகனசுகம் கிடைக்கும். அரச அதிகாரிகளின் உதவிகள் தேடிவரும். வழுக்கி விழல், கைகால் பிடிப்பு, சிரசு நோ, சளி, நெஞ்சுப்படபடப்பு என்பன வரலாம். கோயில் துறை, போக்குவரத்துத்துறை, செய்தித் துறை, ரீவித்துறை, குருத்துறை, மருந்துத்துறை போன்றவர்களுக்கு கலகம் பிறந்து நியாயம் பிறக்கும் காலமாகும். பெரியவர்களின் உதவிகளால் இதுவரை உங்களுக்கு கஷ்டங்கள் கொடுத்தவர்கள் விலகிநடப்பார்கள். அதிகாரிகள் உங்கள் உதவிக்கு நாடி வருவார்கள். உங்கள் தேவையால் நல்ல மாற்றங்கள் அவர்களுக்கு கிடைக்கும். உங்களின் புகழ் வளரும்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி,வெள்ளி.*

### தனுசு

நீங்கள் செய்த பிழைகளை மறைக்கப் பார்க்கிறீர்களோ? கடுமையாக நடவாதீர்கள். தொழில் குடும்ப ஸ்தானத்தில் நடக்கும் தவறுகளைக் கீண்டபடி சொல்லாதீர்கள். அதனால் எதிர்ப்புக்கள் வரலாம். குடும்ப சுகம் உண்டு. அரச உதவிகள் கிடைக்கும். இடமாற்றங்கள் வரலாம். பொருள் தவற இடம் உண்டு. முழங்கால் பிடிப்பு, முதுகுப் பிடிப்பு நோ, சளித்தொல்லை, உரசல் காயங்கள் என்பன வர இடம் உண்டு. வியாபாரத்துறை, கோவில் தொண்டு, நகை வேலை அச்சுத் தொழில், பத்திரிகைத்துறை, போக்குவரத்துத்துறை போன்ற துறையினர் அதிக லாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, வெள்ளி.*

### மகரம்

உதவிக்கு வருபவர்களில் சிலர் உபத்திரவம் கொடுக்கிறார்கள் எனக் கலங்குகிறீர்களா? தொழில் ஸ்தானத்தில் உங்களுக்கு இந்த அனுபவங்கள் ஏற்படலாம். பொறுமையாக இருங்கள். உங்களுடன் இருப்பவர்களுடன் கதைப்பது மிகக் கவனம். கலகத்தை உருவாக்கி உங்களை நாலு பேர் சிரிக்கச் செய்வார்கள். சகோதரங்கள் உதவி செய்வார்கள். கழுத்துநோ, பிடிப்பு, விறைப்பு, சளிவருத்தங்கள் என்பன வர இடம் உண்டு. எதிர்ப்பாளருடன் பொறுமையாக இருங்கள். தூரதேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும். விவசாயத்துறை, ஆராய்ச்சித்துறை, செய்தி, போக்குவரத்துத்துறை போன்ற துறையினர்கள் ஆதாயம் அடைவார்கள்.

அதிர்ஷ்ட நாள்:- சனி, வெள்ளி.

### கும்பம்

சிலர் சிலரை மறைமுகமாக - வேகமாக வருத்துவார்கள். அதனால் வருத்துபவர்களே பின்புவருந்துவார்கள். இப்படியாகத் தொழில் ஸ்தானத்தில் உங்களுக்குப்பல அனுபவங்கள் ஏற்படும். நீங்கள் பேசிப்பேசிக் காரியங்களைச் சாதித்துக் கொள்ள இடம் உண்டு. குடும்பத்தில் கருத்து வேற்றுமை வரலாம். சமாளியுங்கள். குழந்தைகள் அல்லது சகோதரங்களின் அலுவல்களுக்காக ஓடியாடித் திரிவீர்கள். அரசியல்வாதிகளாலும், அரசாங்க அதிகாரிகளாலும் ஆதரவு பெருகி வரும். நிதானமாக இருக்கவும். சளித் தொல்லை, முட்டுவருத்தம், பயப்பாடுகள், கைகால் உரசல் காயங்கள் என்பன வரலாம். நீதித்துறை, வியாபாரத்துறை, எண்ணெய்த் துறை, விவசாயத்துறை, மரக்கறி வியாபாரத்துறை, குருத் துறை போன்றவர்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கும். சிலருக்கு இலாபங்கள் அதிகரிக்கும்.

அதிர்ஷ்ட நாள்:-சனி.

## மகாதேவா ஜோதிடம்

### மீனம்

உங்களுக்குப் போராட்டமான காலமாகும். பொருள் ஈட்டுவதில் புதிய நடைமுறை, ஒப்பந்தங்களைக் கடைப்பிடிப்பீர்கள். தொழில்ஸ்தானத்தில் படிப்படியான நன்மைகள் ஏற்படும். சத்துருக்கள் உங்களை கண்டு ஓட்டம் எடுப்பார்கள். குடும்ப சுகம் கொடுக்கும். சிலருக்கு கடன் தொல்லை அதிகரிக்கும். சளித் தொல்லை, கைகால்வருத்தம், நாரி நோ, வாய்வுத் தொல்லை என்பன கொடுக்கும். வியாபாரத்துறை, பாதுகாப்புத்துறை, மின்சாரத்துறை, வைத்தியத்துறை, குருத்துறை, சட்டத் துறை போன்ற துறையினர்களுக்குப் புதிய இலாபங்கள் அதிகரிக்கும். தூரதேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும். இடமாற்றங்கள் செய்வது நல்ல தல்ல.

அதிர்ஷ்ட நாள்:-சனி.

★

## தென்மராட்சியே! தேடுகிறோம் உனை!

**முன்னம் நாம் வாழ்ந்திருந்த அழகான சிற்றூரில்...**
**சனமெல்லாம் சிதறி சனமெல்லாம் பல திசையில்...**
**மின்னல் விளையாட்டாய் நடந்திடுச்சு! - அங்கிப்போ**
**இன்னல் காலமென விதி கையை விரிச்சிடுச்சு!**

**துள்ளித்திரிந்த பள்ளிக்கூடமெல்லாம் பல உடைவு!**
**அள்ளி அரவணைத்த வீதிகளில் போர்ச்சிதைவு!**
**ஊர்வீட்டு உறவெல்லாம் போனதென்று நெட்டுயிர்த்து**
**வாய்விட்டு அழுகிறதா வாசப் பூஞ்செடிகள்....!**

**காலை மணியொலிக்கும் ஆலயத்தின் மணி அசைவு**
**ஓலமிட்டு இப்போ ஓங்கி அறைகிறதா...?**
**யாருமற்ற வெறு வெளியில் எங்கள் ஊர்வாசம்**
**போர் உதறும் வெடி நெடியில் கலந்து மறைகிறதோ...?**

**மழைசொட்டிச் சிதற, நெல்லு விதைக்கின்ற பருவமெல்லோ...?**
**மழை பூக்க, நெல்லுக்காய் வயல் காத்துக் கிடக்கிறதோ....?**
**குயிலுக்காய் மாந்துளிர்கள் அப்போதே பூத்தனவே....?**
**குயில் வந்து போயிற்றா? ஷெல் கலைத்து விரட்டிற்றா...?**

**அந்நாளில் எல்லார்க்கும் இடம்தந்த ஊர் என்று**
**சொன்னார்கள் இப்போதோ ஊர் சிதைந்து போயிற்றே!**
**என்ன கொடுமையிதோ? கேட்பதற்கு ஆளில்லையோ!**
**சின்னத் திருப்பமொன்று சீக்கிரமே வாராதோ?**

**இன்று பிரிந்து விட்டோம்! என்றாலும் காத்திருக்கோம்!**
**நன்றாய் ஒரு காலம் வரவென்று நேர்ந்திருக்கோம்!**
**அந்த வீதிகளில், அளைந்தணைத்த எம்மண்ணில்....**
**சந்தத் தமிழ் மணக்க வரத்தானே ஆசையுற்றோம்!**

- தாட்சாயணி -

## மோதலில் உயிரிழந்த மேலும் 7 புலிகளின் விவரம்

'ஓயாத அலைகள்-4' நடவடிக்கையின்போது தமது தரப்பில் உயிரிழந்த மேலும் ஏழு பேரின் பெயர் விவரங்களை விடுதலைப்புலிகள் நேற்றுக்காலை 'புலிகளின் குரல்' வானொலி மூலம் அறிவித்தனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

★ குணமலர் (துரைலிங்கம் தெய்வேந்தினி - முல்லைத்தீவு)

★ சண்முகலிங்கம் பத்மினி (யாழ்ப்பாணம்)

★ அருள்விழி (தேவராசா ரேவதி - கிளிநொச்சி)

★வைகைச்சுடர் (நடேசபிள்ளை நிசாந்தன் - பூநகரி)

★ சங்கர் அல்லது ரஜீவன் (மனுவல் சத்தியசீலன் - கிளிநொச்சி)

★ சிவகரன் அல்லது சிட்டு (ராமச்சந்திரன் பாலச்சந்திரன் - கிளிநொச்சி)

★ குணமலர் (துரைலிங்கம் தெய்வேந்திரன் - முல்லைத்தீவு) ஆகியோரே உயிரிழந்தவர்கள் ஆவர்.

(ஜ-8)

## 600 ரூபாவுடன் மேலதிகமாக 1,000 ரூபா அடுத்தமாதம் முதல்

பயிலுநர் ஆசிரியர்கள், பட்டதாரிப் பயிலுநர்கள் மற்றும் நூலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், நிர்வாக உதவியாளர்கள் ஆகியோருக்கு கடந்தமாதம அறிவிக்கப்பட்ட ரூபா 600 சம்பள உயர்வுடன அடுத்தமாதம் முதல் மேலதிகமாக ரூபா ஆயிரம் சம்பள உயர்வாக வழங்கப்படும்.

இது தொடர்பான சுற்றறிக்கை சகல வலயக்கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் மாகாணக கல்வி அமைச்சுக்கள், மாகாணக்கல்வித் திணைக்களங்கள் ஆகிய வற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று கல்வி உயர் கல்வி அமைச்சின் கணக்காளர் கே.சுபசிங்க இலங்கைத தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவத்துக்கு அறிவித்துள்ளார்.

(இ-7)

## உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கு பதிவு

யாழ். பல்கலைக்கழகத்தில் 2000-2001 கல்வியாண்டின் உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கான பதிவுகள பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவ ஆலோசகர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளன.

பதிவுகளை மேற்கொள்வோர் 5 ஆயிரத்து 50 ரூபா பணத்தை பல்கலைக்கழக சிறாப்பர் கரும பீடத்திலோ அல்லது மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டினைச் செலுத்திப் பதிவினை அல்லது மீள் பதிவினை மேற்கொள்ளுமாறு பதிவாளர் கேட்டுள்ளார்.

இதன்படி புதிய மாணவர்களுக்கான பதிவுகள் எதிர்வரும் 3ஆம் திகதியும் -

இரண்டாம் வருட மாணவர்களுக்கான மீள் பதிவுகள் 4ஆம் திகதியும் -

காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி திகதியில் மீள்பதிவினை மேற்கொள்ளத்தவறும் இரண்டாம் வருட மாணவர்கள அபராதப்பணமாக நாளொன்றுக்கு 25ரூபா வீதம் செலுத்தவேண்டும்.

புதிய மாணவர்களுக்கான பதிவுகளை மேற்கொள்வதற்கான கடிதம் தபாலில் அனுப்பப்பட்டுள்ளது. கற்கைநெறிக்குத தெரிவாகியோரின் பெயர்ப்பட்டியலை உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறி அலகில் பார்வையிடலாம் எனவும் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

(ஜ-10)

# மக்களைக் குழப்பும் சக்திகள் குறித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும்

## ஈ. பி. டி. பி. அமைப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 30

எமது அமைப்புக்குப் பெருகிவரும் மக்கள் ஆதரவைக் கண்டு அஞ்சுகின்ற மக்கள் விரோத சக்திகள் எமது அமைப்புப் பற்றி தவறான அபிப்பிராயத்தை மக்கள் மத்தியில் உருவாக்குவதுடன் மக்களைக் குழப்ப நிலைக்கு உள்ளாக்கும் செயல்களில் ஈடுபட்டுவருகின்றன. இந்த மக்கள் விரோத சக்திகளின் நடவடிக்கைகள் குறித்து எமது மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம். சம்பந்தப்பட்ட தீய சக்திகளின் செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஈ. பி. டி. பி. அமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி. கே. ஜெகன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

எமது நேசத்துக்குரிய மக்களுக்கு நிரந்தர சமாதானத்தை உருவாக்குவதைத் தனது இலட்சியமாகக் கொண்டு ஈ. பி. டி. பி செயற்பட்டு வருகின்றது. இச்செயற்பாட்டுக்கு இடையூறாகவும் எமது கட்சி முன்னெடுக்கும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடும் விதத்திலும் மக்களை குழப்ப நிலைக்குள்ளாக்கும் விதத்தில் புலிகள் என்ற போர்வையில் அநாமதேயக் கடிதங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன; சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டு வருகின்றன.

மேலும் எமது கட்சியின் துண்டுப்பிரசுரங்களையும் சுவரொட்டிகளையும் கிழித்தெறிவதுடன் துண்டுப் பிரசுரம் வழங்கும் ஆதரவாளர்களின் அடையாள அட்டைகளைப் பறித்துச் செல்லும் கோழைத்தனமான செயல்களிலும் இந்தமக்கள் விரோத சக்திகள் ஈடுபட்டு வருகின்றன.

நேற்று முன் தினம் (28 - 9 – 2000) யாழ். இந்துக் கல்லூரிக்குச் சமீபமாக சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த எமது ஆதரவாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர். காயமடைந்த ஆதரவாளரை மருத்துவமனைக்கு எடுத்துச்செல்ல விரைந்து சென்ற எமது கட்சி உறுப்பினர்கள் சம்பவ இடத்துக்கு வாகனத்தில் சென்று இறங்கியபோது தவறுதலாகத் துப்பாக்கி ஒன்று வெடித்து சன்னம் தரையை நோக்கிப் பாய்ந்தது.

இந்த உண்மை நிலையைத் திரித்து சம்பவ இடத்தில் எமது கட்சியினர் ஆகாயத்தை நோக்கிச் சுட்டனர் எனவும் இதனால் மக்கள் பதற்றமடைந்தனர் எனவும் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. எமது மக்களின் நிம்மதிக்காக உயிரை அர்ப்பணித்துச் சேவையாற்றும் ஈ.பி.டி.பிக்கு மக்களைப் பதற்றத்துடன் வைக்கவேண்டும் என்ற எண்ணம் கிடையாது.

கடந்த காலங்களில், மக்களை மரண அச்சத்துடன் வழி நடத்தியவர்களும் அண்மைக்கால தேர்தலில் மக்களால் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டவர்களும் இன்று மக்களிடம் மீண்டும் வாக்குப் பிச்சை கேட்டுச் சென்று, தமக்கும் ஈ.பி.டி.பிக்கும் நல்ல உறவு இருப்பதாகப் பொய் கூறி தமது சின்னத்துக்கு வாக்களிக்குமாறு கேட்டு வருகின்றார்கள்.

மேலும் யுத்த அனர்த்தங்களால் இடம்பெயர்ந்த மக்களுக்கென 6 மாதகாலத்துக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ள நிவாரணமானது எமது கட்சியின் ஏற்பாட்டினால் இன்று வரையும் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது. நிவாரணத்தை நம்பி எமது மக்கள் வாழக்கூடாது என்ற நிலைப்பாட்டினை ஈ. பி. டி. பி கொண்டிருப்பினும் எமது மக்களில் பெரும்பாலானோர் இதனையே நம்பி வாழ்வதை அறிந்து நிவாரணம் வழங்கல் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளிலும் நாம் கவனமெடுத்து வருகின்றோம். ஆனால் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளில் எவ்வித பங்குபற்றலும் இன்றி மதில்மேல் பூனையாக அரசியல் பேசும் கூட்டணியினரினால் விலைக்கு வாங்கப்பட்ட சில கிராம சேவகர்கள், கூட்டணிக்கு வாக்களிக்காவிட்டால் நிவாரணத்தை நிறுத்தப் போவதாக மக்களை மிரட்டி வருகின்றார்கள்.

எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஈ. பி. டி. பியின் வெற்றியை நிச்சயப்படுத்திக் கொண்ட மக்கள் விரோதக் கட்சிகளும் ஏனைய குழுக்களும் தமது தோல்வியை மூடி மறைக்க ஈ.பி.டி.பியின் மீது அவதூறுகளை அள்ளி வீசுவதுடன் எமது செயற்பாட்டை முடக்க மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகள் குறித்தும் விழிப்பாக இருக்கும்படி பொதுமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

மக்கள் விரோத சக்திகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதுடன் ஜனநாயகச் செயற்பாட்டை முன்னெடுத்து எமது மக்கள் அனுபவித்து வரும் அரசியல் மற்றும் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதற்காக, எதிர்வரும் தேர்தலில் ஈ.பி.டி.பிக்கு வாக்களித்து ஆதரவு தரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

## கட்டடத் திறப்பு விழா

சண்டிலிப்பாய், செப். 30

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிதி உதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் மாடிக் கட்டடத் திறப்பு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் கல்லூரி அதிபர் நா. சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, 'செஞ்சொற் செல்வர்' ஆறு–திருமுருகன் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்துவார்கள்.

வலி. தென்மேற்குப் பிரதேச செயலர் நா. வேதநாயகன் பிரதம அதிதியாகவும், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ரெஜினா இருதயநாதன், யாழ். கல்வித் திணைக்கள பிரதம பொறியியலாளர் கு. சிவபாலன், ஜேர்மன் நிறுவனத்தின் பிரதம இணைப்பாளர் எஸ். இராஜசிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர்.

(ஜ-135)


சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு

**திருமறைக் கலாமன்ற சிறுவர் கலைக்கூடம்**

நடத்தும்

**'சிறார் மகிழரங்கு'**

காலம்: 01-10-2000 ஞாயிற்றுக்கிழமை

நேரம்: மு.ப. 9.00 — பி.ப. 2.30 மணி

இடம்; வேம்படி மகளிர் கல்லூரி

(மேற்படி செயல்முறைசார் நிகழ்வுக்கு ஆர்வமுடைய சிறுவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.) (சி/13137)



**கண்ணீர் அஞ்சலி**

எமது பாடசாலை ஆசிரியைகளான

திருமதி வ. சத்தியபாலன்

செல்வி இ. ஜெயந்தி (தற்காலிக ஆசிரியை)

ஆகியோரின் அன்புத் தந்தையார்

**அமரர் சிவக்கொழுந்து இராசரத்தினம்**

அவர்களது பிரிவினால் துயருறும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், யா/ நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலை.

(78843)


## வீடியோ திரைப்படக் காட்சி

யாழ். பல்கலைக்கழகத்தின் புறநிலைப் படிப்புக்கள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து நடத்தும் வீடியோ திரைப்படக்காட்சித் தொடரில் இன்று காலை 10மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை மண்டபத்தில் பாரதி வாசுவின் 'பன்னீர் புஷ்பங்கள்' எனும் திரைப்படம் காண்பிக்கப்படும். ஆர்வமுடையோர் இந்தப் படக்காட்சிக்கு வருகை தரலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-8)


**2001/2002**

**G.A.Q. Ist in Com.**

விரிவுரைகள் நாளை ஆரம்பமாகின்றன.

**பட்டப்படிப்புகள் கல்லூரி,**

57/13, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(78896)


# சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, செப். 30

சித்தன்கேணி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி சமேத ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வர் கோயிலில் இன்று சனிக்கிழமை காலை 7 மணி முதல் இரண்டாம் புரட்டாதிச்சனி விரதம் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து நாடு நலம் பெறவும், மக்கள் மனநிம்மதியுடன் சந்தோஷமாக வாழவும் இறை ஆசி வேண்டி 'சனீஸ்வர கவசம்' ஓதுதலும் இடம்பெறும்.

(ஜ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, செப். 30

சரித்திரப் சித்திபெற்ற பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வாதராஜப்பெருமாள் கோயிலில் இன்று சனிக்கிழமை காலை 6 30 மணி முதல் இரண்டாம் புரட்டாதிச் சனி விரதம் நடைபெறும்

இதனைத் தொடர்ந்து நாட்டில் ஒற்றுமை அமைதி, சமாதானம் நிலவ இறை ஆசி வேண்டி நண்பகல் 12. 30 மணிவரை பஜனை— கூட்டுப் பிரார்த்தனை வழிபாடுகள் இடம்பெறும்.

(ஜ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, செப். 30

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் திருக்கோயிலின் வருடாந்த உற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

உற்சவ தினங்களில் தினமும் பிற்பகல் 3 மணிக்கு எஸ். கே என். தவராசா "பகவத்கீதை" என்ற தலைப்பில் சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (30)

★ ★ ★

சுழிபுரம் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் நவராத்திரி பூசை, வழிபாடுகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

அங்கு தினமும் விசேட அபிஷேகம், பூசைகளும், நவராத்திரி கொலு பூசையும் இடம்பெற்று வருகிறது.

விஜயதசமி தினமான எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை மாலை மானம்பூத் திருவிழா நடைபெறவுள்ளது.

(ஜ-30)

★ ★ ★

யாழ். நக்கா வீதி, புனித திரேசாள் தேவாலயத்தின் வருடாந்தத் திருவிழா கடந்த 21 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை ஆராதனை, வழிபாடுகள் நடைபெறும். நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்குத்திருநாள் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் ஆலய பங்குத்தந்தை அருட்திரு ஆர் ஜி எம். நேசநாயகம் அடிகளார் தலைமையில் இடம்பெறும்.

(ஜ.30)

# விடுவிக்கப்பட்ட 52 மீனவர்களும் இலங்கை அழைத்து வரப்படுவர்

கொழும்பு, செப். 30

அரசின் கோரிக்கைக்கு இணங்க இந்தியச் சிறைகளில் இருந்த 52 இலங்கை மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்காக மீன்பிடித்துறை நீரியல் வளத்துறை அமைச்சின் பிரதிநிதி ஒருவரும், மீனவர்களின் பிரதிநிதிகள் இருவரும் அடுத்த வாரம் இந்தியா செல்ல உள்ளனர்.

இன்னும் விடுவிக்கப்படாத 126 இலங்கை மீனவர்களை இந்தியச் சிறைகளிலிருந்து விடுவிப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்து வருவதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

(இ-8)

# தேர்தல் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், செப். 30

தேர்தல் வன் செயல்களைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் நான்கு பேர் அடங்கிய குழுவினர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தனர்.

கலாநிதி அர்ச்சுன பராக்கிரம தலைமையிலான இந்தக் குழுவினர் தற்பொழுது யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து நிலைமைகளை அவதானித்து வருகின்றனர்.

யாழ். அரசஅதிபர் மற்றும் அரச அதிகாரிகள் பொது மக்கள் ஆகியோரையும் இக்குழுவினர் சந்தித்து நிலைமைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

(இ-5)

# இலங்கைக்குள் போதைவஸ்து கடத்த முயன்றவர் கைது

இலங்கைக்குள் சட்டவிரோதமான முறையில் ஹெரோயின் போதைப் பொருளைக் கடத்த முயன்றதாகக் கூறப்படும் ஒருவர் நேற்றுக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

பிரஸ்தாப நபர் இந்தியாவிலிருந்து 'ஸ்ரீ லங்கன் ஏயார் லைன்ஸ'க்குச் சொந்தமான விமான மூலம் ரூபா 25 லட்சத்துக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய ஹெரோயின் போதைப் பொருளை இலங்கைக்குள் கடத்த முற்பட்டார் எனவும்—

இந்த நபர் தற்போது சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் விசாரணை செய்யப்பட்டு வருகிறார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-8)

## பயிற்சிநெறி

சிறிலங்கா தொழில் பயிற்சி அதிகார சபையினால் நடத்தப்படும் இலவச மின் இணைப்புப் பயிற்சி நெறி எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை அராலி வடக்கு செட்டியார் மடத்தில் உள்ள பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு ஆறு மாத காலம் இலவச பயிற்சி வழங்கப்படவுள்ளது.

# வலிகாமம் கிழக்குப் பகுதியில் கோழிகளுக்குத் தடுப்பூசி

வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் கோழிகளுக்கான அம்மை நோய்த் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் போன்ற பொது அமைப்புக்கள் ஊடாக தடுப்பூசி ஏற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கோழிப்பண்ணையாளர்கள் கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் செல்வி த. செல்வவினிதா தெரிவித்தார்.

(ஜ-180)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Select II ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: 114, இராசாவின்தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். (78816)

A 40, NEW MODEL விற்பனைக்குண்டு. தொடர்பு: K.V தவம், பழைய வீதி, கோப்பாய். (78870)

SONY T.V 2020 இரண்டு, SONY T.V 2032 இரண்டு, NATIONAL T.V 2171 ஒன்று யாவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 59, சிவன் புது வீதி, நல்லூர். (78863)

இரண்டு மாதம் நிரம்பிய அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. No.6, நந்தாவில் ஒழுங்கை (இராமகிருஷ்ணமிஷன் பாடசாலை அருகில்), கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (78773)

CD-200 HONDA மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: கலைமகள் வாசம், அல்வாய் மேற்கு, அல்வாய். (78870)

## இறைச்சிக்கோழி விற்பனை

புரோயிலர், கல்பேட்ஸ் தினசரி விற்பனைக்குண்டு. K.K.S. றோட், மனோகராச்சந்தி தெற்கு எரிபொருள் கடையில் தொடர்பு கொள்ளலாம். (78860)

புறோயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. (1) இல.31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரா வளவு). (2) பொன்னாலை வீதி, மானிப்பாய (விதானைவளவு).(78785)

## தவறிவிட்டது

அம்மன் வீதி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த மாரிமுத்து கிருஷ்ணா என்பவரது விஷேட அ.அ.(இல.09050 10293)சங்கானைக்கும் மானிப்பாய்க்கும் இடையில் கடந்த சில தினங்களுக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ராஜீ கோல்ட் சென்ரர், சங்கானை எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (78845)

## வீடு விற்பனைக்கு

சித்தன்கேணி, வட்டுக்கோட்டை பிரதான வீதிக்கு அண்மையில் அமைந்துள்ள வட்டு.கிழக்கில் வீடு ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு:சி.மகாமயம், சிவன்கோயில் வீதி, சித்தன்கேணி. (78789)

## மணப்பெண் தேவை

யாழ்.இந்து கௌரவ உயர் குடும்பத்தைச் சேர்ந்த 1963 மிருகசீரிட, செவ்வாய்க் குற்றமற்ற, நற்குணமுள்ள ,கனடாவில தொழில் புரியும் மணமகனுக்கு படித்த, அழகிய, நற்குணமிக்க மணப்பெண் தேவை. திருமணம் யாழ்.நகரில் நடைபெற்று உடன் மணமகள் அழைத்துச் செல்லப்படுவர். அனைத்து விவரங்களும் உள்ளடங்கலாய் உடன் தொடர்புகளுக்கு: விள.இல.1106,மே/பா உதயன், யாழ்ப்பாணம். (78813)

## மணமகள் தேவை

1971Nov.19th பிறந்த அனுஷம் 3rd பாதம் Holland இல் நிரந்தர வசிப்பிடம் பெற்ற வேலையுடன் Electrical Engineering படித்துக் கொண்டிருக்கும் உயர் குடும்பத்தைச் சேர்ந்த, அழகான சிவந்த, நற்குணம் மிக்க மணமகனுக்கு அழகான, வசதியுடன், படித்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். பல்கலைக்கழகத்திலுள்ள, வெளிநாட்டிலுள்ள பிள்ளைகளும் தொடர்பு கொள்ளலாம். தொடர்புகளுக்கு: விள.இல.1108, மே/பா உதயன், கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.(78872)

## இறைச்சிக்கோழிகள் தேவை

இறைச்சிக் கோழிகள் உடன் தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (78819)

## லவ்பேட்ஸ் விற்பனைக்கு

லவ்பேட்ஸ் (Love Birds) பச்சை நிறக்குருவிகள் மட்டும் விற்பனைக்கு உண்டு. ஞாயிறுகாலை 10.00 மணிக்குப் பின்னர் வரவும். தொடர்பு: 67/43, தம்பலிங்கம் அவனியூ, கொட்டடி, யாழ்ப்பாணம். (78848)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமைய கட்டிக்கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/-)தொடர்பு: பாரதி, 430,காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 3081. (C/12787)

## ENGLISH, MATHS

O/Lஇல் Distinction, Credit பெறுபேறுடைய ஆரம்பத்திலிருந்து paper class வரை கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன் கோயிலடி (சிவன் கோயில் பின்புறம்), திருநெல்வேலி. (78818)

## உடன் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள HERO HONDA 100 ss மோட்டார் சைக்கிள் உடன விற்பனைக்குண்டு. தொடர்பு: R.அருமைத்துரை, 2 ஆவது ஒழுங்கை, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு. (78840)

## திருவுருவச்சிலை அமைப்பு

கொழும்புத்துறை,செப்.30

அச்சுவேலி அரசாங்க பொது மருத்துவமனையின் ஸ்தாபகர் சேர் காடினர் சிற்றம்பலம் ஞாபகார்த்தமாக வைத்தியசாலை வளவின் பிரதான நுழைவாயில் அருகே அன்னாரின் முழு அளவிலான உருவச்சிலை நிறுவும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது.

இவ் வைத்தியசாலையில் புதிதாக நிர்வாகக் கட்டடத் தொகுதி ஒன்றை அமைப்பதற்கெனக் கொள்வனவு செய்யப்பட்ட காணிப்பகுதிக்கு சுற்றுமதில் அமைக்கும் வேலையும் தற்போது நடைபெற்று வருகிறது. (ஐ-30)

## பரீட்சை முன் ஆயத்த வகுப்பு

தென்மராட்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்துள்ள ஜி.சீ.ஈ.சாதாரண தர வகுப்பு மாணவர்களுக்கான பரீட்சை முன் ஆயத்த வகுப்புகள் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

தென்மராட்சி கல்வி வலயத்தின் அனுசரணையுடன் மட்டுவில் இந்து இளைஞர் மன்றத்தினரால் இலவசமாக இவ் வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

தென்மராட்சி உதவிக்கல்விப் பணிப்பாளர் இ.கணேசன் நாளை காலை 9 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் வகுப்புகளை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைப்பார். உரும்பிராய் இந்துக்கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி மண்டபம் I, மண்டபம் II ஆகிய இடங்களிலும் இந்த வகுப்புகள் நடத்தப்படவுள்ளதாகவும் இவை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை நடைபெறும் என்றும் மட்டுவில் இந்து இளைஞர் மன்ற செயலாளர் தெரிவித்துள்ளார். (ஐ-ரி)

---

## யா/ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்
## பரிசுத் தினமும்
## பாடசாலைப் பெயர்வளைவு திரைநீக்கமும்

காலம்: இன்று (30.09.2000) சனிக்கிழமை காலை 9.30 மணி (இ.நே)

* முதன்மை விருந்தினர்
உயர்திரு. பா. சுப்பிரமணியம் (மாவட்ட நீதிபதி - மல்லாகம்)
* கௌரவ விருந்தினர்
திருவாளர் ஏ.கே. எட்வேட்ஸ்
(முகாமையாளர் - ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்.நகர்)
* பரிசில் வழங்கல்
திருமதி சிவமலர் சுப்பிரமணியம்
* தலைமை
நயினை எஸ். சோமேஸ்வரபிள்ளை (அதிபர்)

அனைவரையும் வருகவென விருப்புடன் வரவேற்கின்றோம்.

- பாடசாலைச் சமூகம்

விளம்பர அன்பளிப்பு: ராஜா கிறீம் கவுஸ்
(78865) இல. 36, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.

---

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் சடையர் தம்பிஜயா

நாச்சிமார் கோயிலடியை பிறப்பிடமாகவும், நாவற்குழியில் வசித்து தற்போது தற்காலிகமாக இல.167, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலியில் வசித்தவருமான முன்னாள் கருட்டு வர்த்தகரான நாகலிங்கம் சடையர் தம்பிஜயா நேற்று (29.09.2000) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரது பூதவுடல் இன்று (30.09.2000) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-

மகன் - த. குணசிங்கம் (செல்வம்)
(மாருதி தளபாட நிலையம், யாழ்ப்பாணம்)
மருமகன் - க. சுந்தரலிங்கம்
(தபாலகம், சாவகச்சேரி),
குடும்பத்தினர்.

இராமலிங்கம் வீதி,
முடமாவடி. (78879)

---

## யா/ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்
## பரிசளிப்பு விழாவும் பெயர் வளைவு திரைநீக்கமும்

அதிபர், நயினை எஸ்.சோமேஸ்வரபிள்ளை தலைமையில் இன்று (30-09-2000) நடைபெறும். மேற்படி விழா சிறப்புற நிகழ வாழ்த்துகின்றோம்.

அம்பிகா நகையகம்
கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(78861)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி
அ. பிரியா அவர்களின்
அன்புத் தந்தையார்
## அமரர் க.அருந்தவராசா

அவர்களின் திடீர் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வகுப்பாசிரியை, மாணவிகள் ($10^{D}$)
யா/இந்து மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(78877)

---

## வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம்
நீர்வேலி
## கழிக்கப்பட்ட பொருள்கள் விற்பனை

மேற்படி சங்க லொறிகளிலிருந்து கழிக்கப்பட்ட லொறி ரயர்கள், ரியூப்புக்களும், வெற்று சிமெந்து உறைகளும் கேள்வி விண்ணப்பங்கள் மூலம் விற்கப்படவுள்ளன. குறித்த பொருள்களை வாங்க விரும்புவோர் தமது எழுத்து மூலமான கூறுவிலைகளை 09.10.2000 ஆம் திகதிக்கு முன் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்வி விண்ணப்பங்கள் யாவும் 'பொது முகாமையாளர், வலி. கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி' என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் குறித்த கேள்விக்கான உறையின் மேல்பக்க இடது மூலையில் கழிக்கப்பட்ட பொருள்களுக்கான கூறுவிலை என எழுதப்பட்டு அனுப்புதல் வேண்டும். குறித்த கழிக்கப்பட்ட பொருள்களை சங்க வேலை நாள்களில் பார்வையிடலாம்.

நீர்வேலி.
27.09.2000.

- பொது முகாமையாளர்

(C/13127)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

நீதி அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட சமய, சமூக தொண்டனும் கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலய பரிபாலன சபைத் தலைவருமான

## நாகலிங்கம் நித்தியானந்தன் ஜே.பி

அவர்களை அருள்மிகு ஸ்ரீ சாயி துர்க்காதேவி அம்பாளின் அருள் பெற்று இவரின் பணிகள் தொடரவும் நிறை செல்வராக வாழ வேண்டுமெனவும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பரிபாலன சபை,
ஸ்ரீ சாயி துர்க்கா தேவி ஆலயம்.

கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில். (78876)

---

# மீண்டும் மீண்டும் செல்லத் தூண்டும்!...



MILLENNIUM RESTAURANT

மில்லேனியம் றெஸ்ரோறன்ற்

ரசித்தவர்கள் பிரமித்துக் கொள்ள, ருசித்தவர்களை மீண்டும் மீண்டும் வரவழைக்க!....
யாழ்நகரில் இப்படியும் ஓர் இடமா??
மனதுக்கு இதமளிக்கும் ரம்மியமான பூஞ்சோலையின் நடுவே;
நாவுக்கு இதம் தரும் உள்ளம் பூரிக்கும்

* (B)புரியாணி * (F)பிறைட் றைஸ் * நூடில்ஸ்
சகல சூப்வகைகளும்

மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு உணவுவகைகளை உடனுக்குடன் ஓடர்செய்து சுடச்சுட சுத்தமாகத் தயார் செய்து கொடுக்கும் ஒரே இடம்!
என்றும் உங்கள் மனம் விரும்பும்

# மில்லேனியம் றெஸ்ரோறன்ற்

இல.70, இராமநாதன் வீதி,
(யாழ்.பல்கலைக்கழக வீதி,)
கலட்டி, யாழ்ப்பாணம்.

(78692)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ் குடாநாட்டிலிருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 28ஆம் திகதிவரை) பதிவிலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:

513/125447/A 513/125447/B
513/125447/C 513/143817/A
513/153466/A 513/153466/B
513/155208/A 513/155411/A
513/157694/A 513/157694/B
513/157694/C 513/157694/D
513/157867/A 513/157867/B
513/157867/C 513/157867/D
513/158599/A 513/158630/A
513/158686/A 513/158686/B
513/158686/C 513/160587/A
513/160603/A 513/160648/A
513/160687/A 513/160688/A
513/160688/B 513/160708/A
513/160708/B 513/160708/C
513/160844/A 513/160844/B
513/160844/C 513/160893/A
513/160893/B 513/160893/C
513/160917/A 513/161503/A
513/161555/A 513/161555/B
513/161569/A 513/161584/A
513/161584/B 513/161584/C
513/161584/D 513/161584/E
513/161584/F 513/161584/G
513/161785/A 513/161799/A
513/161902/A 513/161926/A
513/161973/A

**யாழ்ப்பாணம்**

512/140679/A 512/140679/B
512/140679/C 512/140679/D
512/140679/E 512/144267/A
512/144267/B 512/144267/C
512/144571/A 512/144571/B
512/144571/C 512/144639/A
512/149933/A 512/149933/B
512/149933/C 512/149933/D
512/149933/E 512/149933/F
512/150041/A 512/150041/B
512/150041/C 512/150041/D
512/150132/A 512/150132/B
512/150148/A 512/150148/B
512/150148/C 512/150158/A
512/150158/B 512/150166/A
512/150166/B 512/150166/C
512/152722/A 512/152722/B
512/152810/A 512/152810/B
512/152810/C 512/153018/A
512/153018/B 512/154054/A
512/154238/A 512/156232/A
512/156295/A 512/156368/A
512/156368/B 512/156408/A
512/156408/B 512/156419/A
512/156419/B 512/156419/C
512/156443/A 512/156443/B
512/156522/A 512/156555/A
512/156555/B 512/156601/A
512/156637/A 512/156637/B
512/156637/C 512/158294/A
512/159013/A 512/159100/A
512/159100/B 512/159148/A
512/159209/A 512/159209/B
512/159443/A 512/159443/B
512/160943/A 512/160943/B
512/161157/A 512/161157/B
512/161157/C 512/161187/A
512/161187/B 512/161187/C
512/161187/D 512/161213/A
512/161213/B 512/161213/C
512/161213/D 512/161213/E
512/161235/A 512/161235/B
512/161235/C 512/161265/A
512/161265/B 512/161265/C
512/161298/A 512/161298/B
512/161298/C 512/161298/D
512/161298/E 512/161298/F
512/161325/A 512/161325/B
512/161329/A 512/161329/B
512/161329/C 512/161335/A
512/161335/B 512/161335/C
512/161335/D 512/161366/A
512/161366/B 512/161366/C
512/161366/D 512/161366/E
512/161377/A 512/161384/A
512/161384/B 512/161384/C
512/161427/A 512/161427/B
512/161431/A 512/161431/B
512/163140/A 512/163146/A
512/163149/A 512/163149/B
512/163153/A 512/163153/B
512/163187/A 512/163187/B
512/163187/C 512/163187/D
512/163203/A 512/163205/A
512/163205/B 512/163207/A
512/163222/A 512/163222/B
512/163222/D 512/163222/E
512/163222/F 512/163233/A
512/163233/B 512/163233/C
512/163254/A 512/163255/A
512/163255/B 512/163255/C
512/163255/D 512/163262/A
512/163273/A 512/163273/B
512/163308/A 512/163344/A
512/163364/A 512/163364/B
512/163372/A 512/163384/A
512/163413/A 512/163413/B
512/163437/A

**கோப்பாய்**

511/57015/A 511/157190/A
511/159497/A 511/163344/B
511/163344/C 512/139126/A
512/147822/A 512/147822/B
512/154089/A 512/154089/B
512/156198/A

**நல்லூர்**

513/131817/A 513/144037/A
513/146386/A 513/146386/B
513/151547/A 513/151547/B
513/151547/C 513/156008/A
513/157718/A 513/157718/B
513/158743/A 513/158743/B
513/158750/A 513/158750/B
513/160843/A 513/161536/A
513/161549/A 513/161552/A
513/161557/A 513/161558/A
513/161558/B 513/161617/A
513/161969/A 513/161969/B
511/141045/A 511/1567630/A
512/142735/A 512/144499/A
512/144499/B 512/144499/C
512/144513/A 512/144513/B
512/144513/C 512/144513/D
512/144513/E 512/144513/F
512/144513/G 512/144543/A
512/144543/B 512/150121/A
512/150121/B 512/150121/C
512/150121/D 512/150121/E
512/150159/A 512/150159/B
512/150159/C 512/152315/A
512/152315/B 512/152413/A
512/152484/A 512/152484/B
512/152611/A 512/152611/B
512/152611/C 512/152729/A
512/152729/B 512/152798/A
512/152967/A 512/153056/A
512/153056/B 512/153056/C
512/153056/D 512/154130/A
512/154130/B 512/154131/A
512/154131/B 512/154159/A
512/154159/B 512/154159/C
512/154222/A 512/154222/B
512/154222/C 512/154222/D
512/154223/A 512/154223/B
512/155543/C 512/156249/A
512/156249/B 512/156283/A
512/156283/B 512/156342/A
512/156354/A 512/156354/B
512/156354/C 512/156354/D
512/156392/A 512/156449/A
512/156464/A 512/156477/A
512/156477/B 512/156477/C
512/156591/A 512/156591/B
512/156591/C 512/156591/D
512/156606/A 512/156606/B
512/156606/C 512/156632/A
512/156632/B 512/156634/A
512/156634/B 512/157045/A
512/159304/A 512/159304/B
512/159304/C 512/159327/A
512/159327/B 512/159342/B
512/159342/C 512/159343/A
512/159344/A 512/159415/C
512/159438/A 512/159451/A
512/159451/B 512/159482/A
512/161021/A 512/161021/B
512/161092/A 512/161092/B
512/161093/A 512/161093/B
512/161093/C 512/161093/D

(தொடரும்)


## ஆத்மார்த்த அஞ்சலி



எமது கல்லூரியில் நீண்ட
காலமாக ஆசிரியராகப் பணிபுரிந்த
ஈழத்து நவீன ஓவியர்
அமரர் **மாற்கு**
அவர்களின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்,**
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.

(C/13134)



## 10 ஆம் ஆண்டு நினைவுகள்

உலகப் பணிக்காக 04 - 06 - 1924



தெய்வப் பணிக்காக 21 - 09 - 1990

**அமரர் பூதர் சக்கரை**

பத்தாண்டு நினைவுகளைச் சுமந்திட்டோம் இனியுமிங்கு
எவ்வாண்டு கழிந்தாலும் அவ்வாண்டு முழுவதுமே
தங்களது நினைவாகிக் கண்ணீரிலே மொட்டரும்பி
பூத்துஅது எந்நாளும் எம்முடனே தானிருக்கும்.

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பீட்டப்பிள்ளைகள்.**

*வளாக வீதி,*
*திருநெல்வேலி.*

(78886)





## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்
2000-10-10

**யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்**
தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளரான
தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்
சங்கத் தலைவர்
**திரு.சி.சிவமகாராசா**
அவர்களை ஆதரியுங்கள்



இல. 11

**தமிழர் விடுதலைக் கூட்டணி** X

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | | | | | | | | |

உதயசூரியன் சின்னத்திற்கு நேரே புள்ளடியிட்டும் இலக்கம் **11**க்கு மேலே
புள்ளடியிட்டும் வெற்றிபெறச் செய்வதுடன் மேலும் விரும்பிய
இரு இலக்கத்திற்கு மேல் புள்ளடியிடலாம்.

(78902)


# புலமைப்பரிசில் பரீட்சை வெட்டுப்புள்ளி விவரம்

கொழும்பு,செப்.30

கடந்த ஓகஸ்டில் இடம்பெற்ற 5ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் பரீட்சைத் திணைக்களத்தினால் நேற்று வெளியிடப்பட்டன.

பரீட்சை முடிவுகளில் மாவட்ட ரீதியான புள்ளிவிவரங்கள் வருமாறு:-

| மாவட்டம் | நிலை | மாவட்டம் | நிலை |
|---|---|---|---|
| கொழும்பு | 137 | முல்லைத்தீவு | 135 |
| கம்பஹா | 137 | மட்டக்களப்பு | 137 |
| களுத்துறை | 137 | அம்பாறை | 136 |
| கண்டி | 137 | திருகோணமலை | 134 |
| மாத்தளை | 137 | குருநாகல் | 137 |
| நுவரெலியா | 129 | புத்தளம் | 137 |
| காலி | 137 | அநுராதபுரம் | 132 |
| மாத்தறை | 137 | பொலன்னறுவை | 132 |
| அம்பாந்தோட்டை | 120 | பதுளை | 128 |
| யாழ்ப்பாணம் | 134 | மொனறாகலை | 105 |
| கிளிநொச்சி | 134 | இரத்தினபுரி | 137 |
| மன்னார் | 134 | கேகாலை | 137 |
| வவுனியா | 136 | | |

## 5ஆம் ஆண்டு புலமைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவன் வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலையைச் சேர்ந்த பி.சிவரூபன் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் பெற்ற புள்ளிகள் 182.

அகில இலங்கை ரீதியாகத் தமிழ் மொழி மூலம் முதன்நிலை பெற்ற 52 மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு (யாழ்.மாவட்ட மாணவர்களின் பெயருடன் அவர்கள் பெற்ற புள்ளிகளும் அவர்களின் நிலையும் குறிப்பிடப்பட்டுள்ளது).-

பி.உமாசங்கர் (பம்பலப்பிட்டி இந்து.), எஸ்.நரேஷ்குமார் (பம்பலப்பிட்டி இந்து.), வி.அருணாத் (வவுனியா த.ம.மகா வித்.), எஸ்.அருண் பிரசாத் (கொட்டகல த.மகா.வித்.), பி.டிலானி (பசறை த.மகா.வித்.), என்.ஆர்.இஸாத்றிசானா (நீர்கொழும்பு அல்ஹாகீர் மத்திய கல்லூரி).

எம்.ஏ.சி.என்.சித்திரா (மட்டக்களப்பு வேலாயுதபிள்ளை ம.வித்.), ஆர்.தர்ஷனாத் (திருமலை கோணேஸ்வரா இந்து.), பி.சிவரூபன் 182-8 (வல்வெட்டித்துறை சிவகுரு வித்.), வை.ரமேஸ்கண்ணா (இரத்மலானை இந்து.).

பதீனா றாஸீர் (அம்பாறை றதீனா வித்.), ஜேபவித்திரா 181-19 (யாழ்ப்பாணம் சென்.ஜோன்பொஸ்கோ வித்.), எஸ்.என்.டினிஷா (கண்டி விகாரமகாதேவி பாலிகா வித்.), ஈ.தசீதரன் (கல்முனை மத்திய கல்லூரி), எம்.ஏ.சி.எச்.சித்தீப் (மருதமுனை சாள்ஸ் மத்திய கல்லூரி).

ரி.கிருஷாந்தன் (கல்லடி முருகதேவன் வித்.), ஜே.வி.ஜோண் செல்ரன் 180-13 (யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி), பி.நிதுரஜன் 180-13 (மகாஜனாக் கல்லூரி), ஜி.சுப்பிரபாத சர்மா 180-13 (நெல்லியடி எம்.எம்.தமிழ்க் கலவன் பாடசாலை), எஸ்.வைஸ்ணவி (கொழும்பு சைவ மங்கையர் வித்.), எஸ்.மயூரன் (கொழும்பு இந்துக்கல்லூரி).

யூ.சஜீவ் நுவரெலியா (சென். ஜோன்பொஸ்கோ வித்.), ஏ.வை.பன்சீர் (அம்பாறை அன்வர் பாஸீர் வித்.), கே.உமாசுதன் 179-20 (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்.), என்.சுவிந்தி 179-20 (தும்பளை சைவப் பிரகாச மகா வித்தியாலயம்), எஸ்.அன்ரனி நிஷாந் (கொழும்பு சென். அன்ரனீஸ் ஆண்கள் வித்.), ஜே.அபர்ணா (கொழும்பு சைவமங்கையர் வித்.), எம்.எச்.கசுன் நஸார் (புத்தளம் சாகீர் நஸார் மகா.வித்.).

எஸ்.அருண்பிரசாத் (பொகவந்தலாவ திரேசா ம.வி), வீ.யமுனி (மட்டக்களப்பு வின்சென்ற் மகளிர் வித்.), ஆர்.துஷாந்தனா (வவுனியா றம்பைக்குளம் ஜி.எம்.வி.), ரி.தனுஷா (வவுனியா றம்பைக்குளம் ஜி.எம்.வி.), ஜே.ஆர்.ஜே.எச்.கொவி (மன்னார் சென்.சுவீரஸ் பெண்கள் பாடசாலை), ஆர்.கோகுலன் (நுவரெலியா பெண்கள் உயர்தரப் பாடசாலை).

கே.விபூஷிகன் (திருமலை சாம்பல்தீவு தமிழ் மகா.வித்.), ரி.லோகபிரசாத் (கிளிநொச்சி சென்.திரேஸா மகளிர் ம.வித்.), என்.றொசாந்தன் 177-34 (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), எம்.கபிலன் 177-34 (சுதுமலை சிந்மய பாரதி வித்.) எஸ்.தக்ஷாயினி 177-34 (தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை) எம்.லாவன்யா 177-34 (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்).

என்.ஜனனி (கொழும்பு சைவ மங்கையர் வித்.) வை.துவாரகா (கொழும்பு சைவ மங்கையர் வித்.) கே.தர்மகுலசிங்கம் (கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), ரி.விஷ்னுவர்த்தனன் (கொழும்பு இந்துக்கல்லூரி), எம்.எச்.என்.கரூர் (கோமகம மகா.வித்.), ஏ.எச்.அஷ்ருயா (புத்தளம் பாத்திமா பாலிகா வித்.) ஏ.எஸ்.எவ்.சவ்ரியா (கண்டி பார்த்தீன் மொகமட் வித்.), எஸ்.சத்தியன் அம்பாறை கார்மேல் பாத்திமா வித்.)

எம்.ஏ.கிரிஷா (அம்பாறை அஸாருதீன் ம.வித்.), ஜே.பரணசக்தன் திருமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி), எஸ்.காயத்திரி 176-41 (அளவெட்டி வடக்கு அ.மி.த.க பாடசாலை), கே.மீகஸன் 176-41(கோப்பாய் நாவலர் வித்தியாலயம்). (இ-7)

## ஜே.வி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாத்தளையில் அதன் ஆதரவாளர்கள், வேட்பாளர்கள் தாக்கப்பட்ட சம்பவங்களைக் கண்டித்து இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடாகியுள்ளது.


**புதிய வீடியோ CD வெளியீடு**

அர்ஜுன், மீனா

* ரிதம்

திரையரங்குக்கு முன்னுரிமை

மாலஸ்ரீ, பிரகாஸ்ராஜ், குஷ்பு

* தேவி சாமுண்டி

பொன்னம்பலம், ரம்யாகிருஷ்ணன்

* தசமி

பார்த்திபன், திவ்வியா

* சபாஷ்

பிரதிகளை இன்றே பெறலாம்

**விஷ்ணு வீடியோ**

K.K.S.Rd, கோண்டாவில்.

(78895)



**புலமைப்பரிசில் - 2001**

மாதிரிப் பரீட்சை 3இல் அதி கூடிய புள்ளி பெற்றோர்

| | | | |
|---|---|---|---|
| * அ. சாயினி - | 195 | * உ. நிவேதிகா - | 187 |
| * சி. கீர்த்திகா - | 187 | * சி. சிவஜனனி - | 177 |

அடுத்த 4ஆவது பரீட்சை

நாளை 01.10.2000 ஞாயிறு காலை 8.30 மணி (ப.நே.)

**நாவலர் கல்வி நிலையம்**

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(78873)



இன்று ஆரம்பம்!

A/L 2001

**DAY CLASS**

இரசாயனவியல் - திரு.அன்பு

மதியம் 2 மணி

**SUBRA (14)**

சித்தன்கேணி

* அண்மைக்கால பரீட்சை மாற்றத்திற்கேற்ப பாடக் குறிப்புகளும் வழங்கப்படும்.

(78869)



**எமது வீடியோ வெளியீடு**

பிரகாஷ்ராஜ், குஷ்பு, மா

* தேவி சாமுண்டி
* சபாஷ்
* பட்ஜட் பத்மநாபன்

**வீடியோ விம**

யாழ்ப்பாணம்.



(78242)

வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!!



**(ஈ.பி.டி.பி.)**

1998ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் சமூக, கலாசார அபிவிருத்திக்காக 55 லட்சத்து 67 ஆயிரம் ரூபா ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதியில் இருந்து வழங்கப்பட்டுள்ளது.

யுத்த அவலம் நீங்கி - உங்கள்
இயல்பு வாழ்க்கை திரும்பி
நிம்மதியான வாழ்வு நிலைக்க
வீணைச் சின்னத்துக்கு
உங்கள் வாக்குகளை அளியுங்கள்!



# I B M S

## There're Computer Training Centers in Jaffna.
## Every one says "We're the Best"
## We're not going to say "We're the Best"
## But IBMS

**IBMS** Member of International Association of Information Technology Trainers U.S.A
சர்வதேச கணணி பயிற்றுவிப்பாளர் சங்கத்தில் உறுப்புரிமை.

**IBMS** Accreditation Member of CINTEC, Ministry of Science and Technology.
Granted Provisional Accreditation for NEICT (National Examination in Information and Communication Technologies)
இலங்கை அரசின் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் NEICT கற்கைநெறிக்கு அங்கிகரிக்கப்பட்டது.

**IBMS** Member of ACTOS (Association of Computer Training Organizations)
இலங்கை கணணிகள் பயிற்சி நிலைய கூட்டமைப்பில் உறுப்புரிமை.

**IBMS** யாழ்ப்பாணத்தில் BIT பட்டப்படிப்பினை கற்பிப்பதற்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணணி தொழில்நுட்ப நிறுவனத்தினால் (ICT) பதிவுசெய்யப்பட்டு, பயிற்றுவிக்கப்பட்ட ஒரே ஒரு நிறுவனம்.

**IBMS** National Apprentice and Industrial Training Authority (NAITA) இனால் நடத்தப்படும் SriLanka Computer Driving Licence இற்கு அனுமதி பெற்ற நிறுவனம்.

**IBMS** இலங்கை அரசின் தொழில் மற்றும் மூன்றாம் கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது.

**இந்த நிறுவனம் சிறந்ததா?**
**தீர்மானம் உங்களுடையதே!**

Make Right Move,
Take the Right Step.
Join...

ACTOS

ITrain International Association of Information Technology Trainers U.S.A
IBMS-Member of ITrain

Institute of Business Management Studies IBMS

N.G

**No. 701, K.K.S Road, Jaffna.**



மானிட விடியலுக்காகவும்
மகத்தான சமாதானத்துக்காகவும்
வாக்களிப்போம்!



த. சுபத்திரன் (றொபேட்)

இல. 3

**சுயேச்சைக் குழு - 2**



X



அ. வரதராஜப்பெருமாள்

இல. 1

(78961)

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எஃப்)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 36ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.09.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.